விலை ரூபா: 6.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 தை13 திங்கட்கிழமை (27.01.2003) தொலைபேசி- 2223378 ஒலி 39

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## பாதுகாப்பு அமைச்சின் செயலருடன்

# அமைச்சர் மிலிந்த நேற்று மட்டக்களப்புக்கு விஜயம்!

### நிலைமையை நேரில் அறிந்தார்



(மட்டக்களப்பு நிருபர்)

**அரசும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் மட்டக்களப்பு மாவட்ட நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ சகிதம் அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்று அங்கு சென்று பல்வேறு தரப்பினருடனும் 233வது படைப்பிரிவின் அதிகாரிகளுடனும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.**

யுத்த நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்ட பின் மட்டக்களப்பு மாவட்டத்தின் பாதுகாப்பு நிலைமை,யுத்த நிறுத்த மீறல்கள் தொடர்பாக கிடைத்துள்ள புகார்களை ஆராய்வதற்கு அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்று மட்டக்களப்பு விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

அமைச்சரது இவ் விஜயம் இம் மாதம் 30ம் திகதி வியாழக்கிழமை விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கருணாவை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாணடோ சந்துப்பதற்கான முன்னேற்பாடாக அமைந்திருந்தது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டுவரும் சிறுவர்களை படையில் சேர்த்தல்,கட்டாய நிதி சேகரிப்பு, கட்டாய ஆட்சேகரிப்பு போன்ற விடயங்கள் தொடர்பாக அமைச்சர் மிலிந்த மொறகொட பல்வேறு தரப்பினருடனும் கேட்டறிந்து கொண்டார்.

(10ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அலுவலகத்திற்குள் திடீரெனப் புகுந்த படையினர்

(வவுனியா)

உலுக்குளத்தில் உள்ள விடுதலைப்புலிகளின் அலுவலகத்திற்குள் திடீரென நுழைந்த பாதுகாப்புப் படையினர் அங்கிருந்த போராளிகளை மிரட்டியதுடன்,அங்கிருந்த ஒலி பெருக்கிச் சாதனங்களையும் எடுத்துச்சென்றுள்ளனர்.

பாதுகாப்புப் படையினரின் இத்தகைய அத்துமீறல் சம்பவம் குறித்து விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசில் துறையைச் சேர்ந்த கதிரவன் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரிடம் முறைப்பாடு செய்துள்ளார். ஒலி பெருக்கிச் சாதனங்களுகக்கு அனுமதிப் பத்திரம் பெறாது அவற்றைப் பாவித்தமையினாலேயே இவறறை கைப்பற்ற வேண்டிய நிலை ஏற்பட்டதாகப் படைத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். (வ)

## தேர்தல் இல்லாமல் புதிய அரசை நிறுவவே ஜே.வி.பியுடன் பேசுகிறோம்

– பொ.ஐ.முன்னணி செயலர் டீ.எம்.ஜயரத்தின –

(கொழும்பு)

ஜே.வி.பியுடனானஅடுத்த சுற்றுப் பேச்சுக்களில ஸ்ரீ.ல.சு.கட்சியின் பிரதிநிதிகள் மட்டுமல்லாது.பொ.ஐ.மு சார்பிலும் பிரதிநிதிகள் பங்கு பற்றுவர் என்று தெரிவிக்கப்படுகிறது.பெப்ரவரி 6ம் திகதி நடை பெறவுள்ள அடுத்த சுற்றப் பேச்சுக்களில் பொ.ஐ.முயின் பொதுச் செயலாளர் டீ.எம்.ஜயரத்தினாவும் கலந்து கொள்ளவுள்ளார்.

இது பற்றி அவர் கருத்துத் தெரிவிக்கையில், பேச்சுவார்த்தைகளுக்கான நிகழ்ச்சி நிரல் இன்னும் தயாரிக்கப்படவில்லை. இனிமேல் தான் பொஜமுன்னணிபின்பங்காளிகளுக்கு

(10ம் பக்கம் பார்க்க)

## அரசு-புலிகள் பிரதிநிதிகள் பேளினில் ஜேர்மன் பிரமுகர்களை சந்திப்பர்!

### சமஷ்டி குறித்து இருதரப்பும் ஆராயும்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடை பெறவுள்ள அடுத்த கட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இருதரப்புப் பிரதிநிதிகளும் ஜேர்மன் தலைநகர் பேர்ளினில் முக்கிய அரசியல் பிரமுகர்களைச் சந்திக்கவுள்ளனர்.

இச்சந்திப்பின் போது ஜேர்மன் நாட்டின் சமஷ்டி ஆட்சி முறை குறித்து இக் குழுவினர் விரிவாக ஆராயவுள்ளனர்.

நடைபெற்று முடிந்த மூன்றாம் சுறறுப

(10ம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப வேண்டாம்

### யூ.என்.எச்.சி.ஆர் வேண்டுகோள்

(கொழும்பு)

இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் அங்கு தஞ்சம் புகுந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை உடனடியாகத் திருப்பி அனுப்பக் கூடாதென அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் (யூ.என்.எச்.சி.ஆர்)அந் நாடுகளைக் கேட்டுக் கொண்டுள்ளது.

இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான

(10ம் பக்கம் பார்க்க)

## மகேஸ்வரனுடன் மிலிந்த பேச்சு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்பிடத்திற்கும் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனுக்கிடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலையைத் தீர்ப்பதற்காக விஞ்ஞான மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட அமைச்சர் மகேஸ்வரனைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இப் பேச்சுவார்த்தை இரண்டு மணி நேரம் நடை பெற்றதாகவும் தனது

(10ம் பக்கம் பார்க்க)

# சதீஸ் நம்பியாரின் வருகையை நான் அடியோடு எதிர்க்கிறேன்

### அமைச்சர் மகேஸ்வரன் பேட்டி

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் உள்ள அதி உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு இந்திய முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சதீஸ் நம்பியாரின் வருகையைத் தான் முழுமுச்சாக எதிர்க்கிறேன் என்று இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

மக்களை அவர்களது இருப்பிடங்களில் இருந்து துரத்திவிட்டு அவர்களை மீண்டும் அங்கு குடியமர்த்துவதற்கு வேறு ஒரு நாட்டு இராணுவ அதிகாரியிடம் இருந்து ஆலோசனை பெறப்படுவதை எமது இனம்

(10ம் பக்கம் பார்க்க)

ஹற்றன் நஷனல்
அடகு வைக்கும் வசதி
வாரத்தில் ஆறு நாட்கள் சனிக்கிழமை உட்பட

ஒரு பவுணுக்கு ரூ. 6325/- அடகுப்பணம்!
மாதாந்த வட்டி1.8% மட்டுமே!
மேலதிக விபரங்களுக்கு HNB யாழ்ப்பாணக் கிளையை நாடுங்கள்
ஹற்றன் நஷனல் வங்கி
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி
யாழ்ப்பாணக் கிளை
இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதி,
தொலை பேசி: 021-2222787,021-2223463
தொலை நகல்: 021-2223194
[C/5501]

# புலிகளின் சமாதானச் செயலகத்திற்கு யப்பான் 35 மில். ரூபாவை வழங்கும்

(கொழும்பு)

இலங்கையில் சமாதான நடவடிக்கைகளில் புதியதொரு உத்வேகத்துடன் செயற்பட ஆரம்பித்திருக்கும் யப்பான், விடுதலைப் புலிகளின் கிளிநொச்சி சமாதான செயலகத்திற்கு 35 மில்லியன் ரூபாக்களை அன்பளிப்பாக வழங்கவுள்ளது என்று தெரியவந்துள்ளது. சமாதான நடவடிக்கைகளில் தீவிரமானதொரு பங்கை ஏற்கத் தொடங்கியிருப்பதுடன் அனுசரணையாளரான நோர்வே சற்று விலகி ஒதுங்கி நடக்கச் செய்வதாகவும் இந்தியாவை சினக்க வைக்கக் கூடியதாகவும் இச்செயல் அமையலாம் என்று இராசதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் யப்பானில் விசேட தூதுவர் யசுஷி அகாஷி கிளிநொச்சிக்கு விஜயம் செய்து புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் தமிழ்ச்செல்வனை சந்தித்துப் பேசினார். சந்திப்புக்கு நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ற்பேர்க் தலைமை தாங்கினார். சமாதான நடவடிக்கைகளில் தாராள மனத்துடன் ஈடுபட்டு வந்தமையை புலிகள் வரவேற்றனர். மதியபோசனமும் வழங்கப்பட்டது. தலைவர் பிரபாகரன் யசுஷி அகாஷியைச் சந்திக்கவில்லை. அன்ரன் பாலசிங்கம் சமுகமளிக்கக் கூடிய சூழ்நிலையில் பிறிதொரு சந்தர்ப்பத்தில் சந்திப்பதற்கு விருப்பம் தெரிவிக்கும் செய்தியை வழங்கியிருந்தார்.

சமாதான செயலகத்திற்கு கணணி மற்றும் தளபாடங்கள் போன்ற வசதிகளைச் செய்வதற்கே இந்நிதி வழங்கப்படவிருப்பதாக தெரிகிறது. சர்வதேச விவகாரங்களில் யப்பான் தொடர்ந்தும் ஒதுங்கி நடக்க விரும்பவில்லை என்றும் இலங்கையில் ஏற்பட்டுள்ள தகராற்றை தீர்த்து வைப்பதில் உழைக்கப் போவதாகவும் யப்பான் இராசதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அதற்கு அமெரிக்காவின் பின்னணி ஆதரவும் உண்டெனவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (த)

## வணிகர் மன்றப் பொதுக்கூட்டம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நேற்றைய தினம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் தலைவர் பி.என்.சற்குணராஜா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியைச் சேர்ந்த அமிர்தாப் பிரதம விருந்தினராக பங்கு கொண்டு உரையாற்றினார். (த-77)

## விசாரணைக்குழு கொழும்பு திரும்பியது

(தென்மராட்சி)

வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் பற்றிய விசாரணையை மேற்கொள்ளவென கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த விசாரணைக் குழுவினர் தமது முதற்கட்ட விசாரணையை பூர்த்திசெய்து கொழும்பு திரும்பியுள்ளனர்.

கடந்த மூன்று தினங்களாக யாழ்ப்பாணத்திலும் சாவகச்சேரியிலும் நடத்தப்பட்ட முதற்கட்ட விசாரணையின் போது 54 பேர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இவ் விசாரணைக் குழுவில் கலாநிதி தேவநேசன் நேசையா, கமிலாஸ் பெர்ணாண்டோ, ஜெஸிமா இஸ்மாயில் ஆகியோர் அடங்கியிருந்தனர். இக்குழுவின் செயலாளராக மனித உரிமைகள் ஆணைக்குழுவினைச் சேர்ந்த ஜனாப் இக்பால் செயற்பட்டுள்ளார்.

இம் முதலாம் கட்ட விசாரணையில் நாவற்குழியில் இடம்பெற்ற சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டவர்கள் பற்றியும் ஆராயப்பட்டதாக அறியப்படுகின்றது.

அத்துடன் விசாரணையின் போது வாக்குமூலம் அளித்தவர்களின் வாக்குப் பிரதியை உடனுக்குடன் தருவதாகக் கூறிய விசாரணைக் குழுவினர். தற்போது அவை கொழும்பில் இருந்து உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டமை குறித்து சங்கத்தினர் அதிருப்தி அடைந்துள்ளனர் என சங்கச் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த கட்ட விசாரணை எதிர்வரும் மார்ச் மாதத்தில் இடம் பெறும் எனத் தெரியவந்துள்ளது. (த-77)

## இளைஞர் தாக்கப்பட்டார்

(மானிப்பாய்)

அளவெட்டி கும்பளைச் சந்தியில் இளைஞர் ஒருவர் படையினர் இருவரால் நேற்றுக் காலை 10.30 மணியளவில் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

அதே இடத்தைச் சேர்ந்தவரான செல்லத்துரை சுவேந்திரன் (வயது 24) என்பவரே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார். (த-232)

## தனியார் கல்வி நிலைய இயக்குநர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட தனியார் கல்வி நிலையங்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு யாழ். சயன்ஸ் ஹோல் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பல்வேறுபட்ட முக்கிய விடயங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் அனைத்து தனியார் கல்வி நிலைய இயக்குநர்களையும் தவறாது சமுகந்தருமாறு தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியம் கேட்டுள்ளது. (ந-5)

## கைதடியில் புதிய படை முகாம் 7 குடும்பங்கள் இடம்பெயர்வு

(திருநெல்வேலி)

சாவகச்சேரி மட்டுவில் வைரவர் ஆலயத்திற்கும் கைதடிச் சந்திக்கும் இடையில் படையினர் புதிதாக முகாம் அமைத்து வருகின்றனர்.

இதனால் 7 குடும்பங்கள் இடம்பெயர்ந்து மட்டுவில் தெற்கு வாகையடிக்குச் சென்றுள்ளனர்.

படையினர் முகாம் அமைத்து வரும் பகுதியினுள்ளே தாம் குடிநீருக்கு பயன்படுத்தும் கிணறு உள்ளதாகவும் இவர்களின் முகாம் அமைக்கப்படுவதாலேயே தாம் இடம்பெயர்ந்துள்ளதாகவும் இடம்பெயர்ந்தோர தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே சாவகச்சேரியில் உள்ள முகாம் அமைக்கப்பட்டு வருவதாக படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி டச்சு றோட்டில் அமைந்திருந்த படையினர் முகாம் மூடப்பட்டு சாவகச்சேரி தபாலக வீதியில் அமைக்கப்பட்டுள்ளது. என்றும், வேறு படைமுகாம்கள் அப்பகுதியில் இல்லை என்றும் படைத்தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-43)

## ஓமந்தையில் ஒருவர் கைது.

(வவுனியா)

வவுனியாவில் இருந்து ஓமந்தையூடாக் வன்னிப் பகுதிக்கு 200 மழைக் கவசங்களைக் கொண்டு சென்ற நபர் ஒருவர் ஓமந்தைச் சோதனைச் சாவடியில் வைத்து பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்

மேற்படி நபர் இராணுவ சீருடையை ஒத்த மழைக் கவசங்களை எடுத்துச் சென்றமையாலேயே கைது செய்யப்பட்டதாகப் பொலிசார் தெரிவித்தனர் விசாரணைகள் தொடர்கின்றன. (த)


5—ம் தர புலமைப் பரீட்சைக்குத் தோற்றும்

அன்பு மாணவ மணிகளே!

உங்கள் அபிமான வலம்புரியில்

எதிர்வரும் புதன்கிழமை 29.01.2003 முதல்
புலமைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்
வெளிவருகின்றது.

ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் எதிர்பாருங்கள்.

மாணவர்கள் எழுதி அனுப்பும் விடைகள் திருத்தப்பட்டு அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் மாணவர்களின் பெயர் விபரங்கள் வலம்புரியில் பிரசுரிக்கப்படும்.

கல்விப்பகுதி
வலம்புரி

பிரதமரின் சமாதான முயற்சிகளை உலக நாடுகளுக்கு விளக்கிக் கூறவே

# ஐ. நா. ம. உ. ஆ. குழு பாராளுமன்ற குழுவின் தலைவர் சமரசிங்க உறுதி

(கொழும்பு)

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான நடவடிக்கைகளின் பூரண விபரங்களை உலக நாடுகள் அனைத்திற்கும் தெரியப்படுத்தவுள்ளேன்.**



இவ்வாறு அண்மையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆனைக்குழுவின் பாராளுமன்ற சங்கத்தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட இலங்கைத் தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்கா தெரிவித்துள்ளார்.

கடந்த 20 ஆம் திகதி ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சங்கத்தின் 100ஆவது கூட்டத்தொடரில் கலந்து கொண்ட அமைச்சர் மகிந்த சமரசிங்கா நேற்று முன்தினம் கொழும்பு வந்து சேர்ந்த போது அங்கு நின்ற பத்திரிகையாளரிடம் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், தமக்கு கிடைத்த இந்நிய மனம் நாட்டுமக்களுக்கு கிடைக்கப் பெற்ற பெரும் வெற்றியாகும்.

அத்துடன் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையிலான சமாதான நடவடிக்கைகளின் வெற்றியையே இத்தகைய நியமனம் எடுத்துக் காட்டுகிறது.

ஜனநாயக வழிமுறைகளை கடைப்பிடிக்கும் ஒவ்வொரு நாடும் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாக்கும் உச்சக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் இவற்றை மீறிய சில சம்பவங்கள் தெற்காசிய பிராந்திய நாடுகளில் இருந்து இடம்பெற்றுவருகின்றன என்றும் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை தமது கூற்றிற்கு ஆதரவாக மியான்மார், மலேசியா, பாகிஸ்தான் ஆகிய இடங்களில் இடம்பெற்ற சில சம்பவங்களைக் குறிப்பிட்டார் (க-10)

## இளைஞர் கழகங்கள் புனரமைப்பு

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குப்பட்ட பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

மேற்படி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட இளைஞர் கழகங்களிற்கிடையில நடைபெறவுள்ள விளையாட்டுப போட்டிகளிற்கான ஆரம்ப நடவடிக்கையாகவே மேற்படி புனரமைப்புக்கள் இடம்பெற்றுவருகின்றது.

இப் பகுதியில் 16ற்கு மேற்பட்ட இளைஞர் கழகங்கள் பதிவு செயயப்பட்டுள்ளதாகவும் இன்னும் சில கழகங்கள் பதிவுசெய்யப்பட உள்ளதாகவும் இப்பிரதேச செயலக இளைஞர் சேவை உத்தியோகஸ்தர் ஐ. தபேந்திரன் தெரிவித்தார். (உ- 258)

## இடதுசாரி கட்சிகளின் கூட்டமைப்பு உடன்படிக்கை விரைவில் கைச்சாத்தாகும்

(கொழும்பு)

இடதுசாரிகட்சிகளுக்கிடையிலான கூட்டமைப்புக் குறித்த உடன்படிக்கை ஒன்று விரைவில் கைச்சாத்திடப் படவுள்ளதாக புதிய இடதுசாரி முண்ணணித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு புதிய இடதுசாரி முன்னணி, ஜனநாயக இடதுசாரி முண்ணணி, சமசமாஜக் கட்சி, ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட்கட்சி ஆகிய கட்சிகள இணைந்து கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கவுள்ளன.

இக்கூட்டமைப்பு அமைப்பது தொடர்பாத கட்சிகள இணைந்து இதுவரை நான்கு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளன.

இதனையடுத்து புதிய கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கிக் கொளவது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கூட்டமைப்பு ஒன்றை இடதுசாரிக்கட்சிகள் உருவாக்கிக்கொள்வது இனிவரும் தேர்தலின்போது கட்சிகளுக்கு மேலும் பலமளிக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமையினை க்ருத்தில் கொண்டு 10 முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கி உள்ளதுடன், பொதுஜனஐக்கிய முன்னணியும், ஜே.வி.பியும் இணைந்து செயற்பட திட்டம் தீட்டி வருகின்றமையும் குறிப்பித்தக்கது. (க-08)

## தனியார் பஸ் சாரதிகள், நடத்துனர்கள் போக்குவரத்து ஆணைக்குழுவில் பதிவு செய்தல் அவசியமாகும்

(கொழும்பு)

தனியார் பஸ்களில் பணியாற்றும் சகல சாரதிகள் மற்றும் நடத்துநர்களைத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவில் எதிர்வரும் ஏப்ரல் 1ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யுமாறு ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஆணைக்குழுவின் தலைவர் ஏ.ரி. கலகுலே கருத்து வெளியிடுகையில்

பதிவிற்கான விண்ணப்பத்துடன் அங்கீகரிக்கப்பட்ட தொழில் தகைமை சான்றிதழ் ஒன்றையும் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கவேண்டும்.

அத்துடன் இதற்கென சாரதிகள் பயிற்சிப் பாடசாலைகளினால் விசேட பயிற்சி ஒன்று நடத்தப்பட்டு வருகின்றமையினால் சாரதிகளாகவும், நடத்துநர்களாகவும் பயிற்சி பெறவிரும்புவர்கள் இதில் சேர்ந்து பயிற்சியைப் பெற்றுக கொள்ளலாம்.

இதேவேளை அவ்வாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவில் பதிவுசெய்பவர்களுக்கு மாத்திரமே யூன் மாதம் 15ஆம் திகதிக்கு பின்னர் சாரதிகளாகவும், நடத்துனர்களாகவும் பணியாற்ற அனுமதிக்க முடியும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (க-10)

## சிறுவர் உரிமைகளை பாதுகாக்கும் திட்டம்

(கொழும்பு)

இலங்கைக்கான சர்வதேச சிறுவர்களுக்கான பாதுகாப்பு அமைப்பு இலங்கையில் வாழும் சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்து உதவுவதற்கென சமூகசட்ட பாதுகாப்பு திட்டம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இவ்வாறு வழங்கப்படவுள்ள சட்ட உதவிகள் பின்வருமாறு:

* உரிமைகள் பாதிக்கப்பட்ட அல்லது மீறப்பட்ட சிறுவர்களுக்கு சமூக-சட்ட உதவிகளை வழங்குதல்
* சிறுவர்களின் பெற்றோர் பாதுகாவலர்களுக்கு அவர்கள் தொடர்பான சமூக சட்டமதியுரை வழங்கல்.
* சிறுவர்களின் சமூக - சட்ட உரிமைகள் பற்றிய தகவல்கள், அறிவு, போதனைகள் ஆகியவற்றை பெற்றுக கொடுப்பதால் அவர்களின நிலையைப் பலப்படுத்தல்.
* சிறுவர் உரிமைகள் தொடர்பாக பெற்றோர், பாதுகாவலர், பொதுமக்கள் ஆகியோருக்கு தகுந்த அறிவுரையை வழங்கல்.

இது விடயம் தொடர்பான சேவை கொழும்பு - 12 இல் உள்ள மஹிந்த மாவத்தையில் வழங்கப் படுகின்றது. (க-04)

## மக்கள் நன்மையை கருத்தில் கொண்டு பணிபுரிய வேண்டும

அரச ஊழியர்களுக்கு அறிவுரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தின் நன்மையையும் அபிவிருத்தியையும் கருத்தில் கொண்டு பணிபுரிய விரும்பாத அரசாங்க ஊழியர்கள் தாமாகவே மாவட்டத்தை விட்டு வேறு இடங்களுக்குச் செல்லாம்.

என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ. பத்மநாதன் அரச செயலகத்தில் கடந்த வாரம் நடைபெற்ற கூட்டமொன்றில் உரை நிகழ்த்தும் போது தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில், யாழ். மாவட்டத்தில் தற்போதுள்ள நிலையில் மக்களுக்கான சேவைகளை அர்ப்பணிப்பு உணர்வுடனும் சேவை மனப்பான்மையுடனும் செய்யக் கூடியவர்களே தேவைப்படுகின்றனர். கடந்த காலங்களில் நிலவிய நிலைமை இப்போதைய புதிய சூழலுக்கு ஏற்புடையதாக இருக்கமாட்டாது.

எனவே யாழ். மாவட்டத்தில் பணிபுரிகின்ற அரசாங்க ஊழியர்களும் அதிகாரிகளும் மரபுரீதியான சிந்தனைகள் செயல்பாடுகளைத் தவிர்த்துக் கொண்டு புதிய நோக்கில் விஞ்ஞான பூர்வமாகச் சிந்தித்துச் செயற்பட தம்மை மாற்றிக் கொள்ள முன்வரவேண்டும். நெகிழ்ச்சித்தன்மையுடன் ஊழியர்கள் செயலாற்ற வேண்டியது அவசியம் எனக் குறிப்பிட்டார் (க-77)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு உதவி அரச அதிபர் பிரிவுக்கான பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை காலை 10.00 மணிகரு நெடுந்தீவு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (க-3)

## இராணுவ சிப்பாய் கைது

(கொழும்பு)

போலிக் சீட்டுக்களை விற்ற இராணுவ வீரர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இராணுவத்தில் இருந்து தப்பிவந்த இவர், அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களுக்கு நன்கொடை சேகரிப்பதாகக் கூறிக்கொண்டே இப்போலிக் சீட்டுகளை விற்பனை செய்தார்.

இராணுவச் சீருடையில் போலிச் சீட்டுக்கள் விற்பனை செய்யப்படுவதாகக் கிடைத்த தகவலை அடுத்தே இவர் கைது செய்யப்பட்டார். (க.08)

## ஜே.வி.பி கூட்டம் இன்று கொழும்பில்

(கொழும்பு)

ஜே.வி.பி.யின் கொழும்பு மாவட்ட தேர்தல் அதிகாரசபைக் கூட்டம் இன்று கொழும்பில் நடைபெறவுள்ளதாக சம்பந்தப்பட்ட கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அவைமேலும் தெரிவிக்கையில், ஜே.வி.பி.யின் பிரசாரக் செயலாளர் விமல் வீரவன்ஸ தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் அரசிற்கு எதிரான திட்டங்கள் குறித்து விவாதிக்கப் படும்.

இதேவேளை கொழும்பு மாவட்டத்தில் தமது கட்சியின் அங்கத்தவர்களை அதிகரிக்கும் நோக்குடனே இக்கூட்டம் நடத்தப் படவிருப்பதாக ஜே.வி.பி. கட்சியின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். (க-10)

## யாழ். மாவட்டத்தில் சமுர்த்தித் திட்டத்திற்கென 2.56 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சமுர்த்தி மக்கள் கருத்திட்டத்திற்கென 2.56 மில்லியன் ரூபா ஒதுக்கப் பட்டுள்ளது.


இவ் ஒதுக்கீட்டு நிதியினைக் கொண்டு யாழ்மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக பகிரப்பட்டு நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இந்நிதியில் மாவட்ட சமுர்த்தி அலுவலக நிர்வாக செலவாக 1%மும் அதேபோல் பிரதேச செயலக சமுர்த்தி திட்ட நடைமுறை நிர்வாக செலவாக 5%மும் ஒதுக்கபபடவுள்ளது.

இக் கருத்திட்டத்திற்கு மக்கள் பங்களிப்பாக 25%மான செயற்பாடுகளும் பெறப்படவுள்ளது.

இந் நிதியினை தெல்லிப்பளை, யாழ்ப்பாணம், நெடுந்தீவு பிரதேச செயலகங்களிற்கு தலா 175,000/=வும் நல்லூர், கோப்பாய், கரவெட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி, மருதங்கேணி, உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை, ஊர்காவற்றுறை, வேலனை ஆகிய பிரதேசசெலயகங்களிற்கு 185,000/= ரூபாவுமாக பகிரப் படவுள்ளது.

தற்போது சமுர்த்தித் திட்ட நடைமுறைகளைச் செயற்படுத்தும் நோக்கில் சமுர்த்தி வங்கிகள் திறக்கப்பட்டுவருவது குறிப்பிடத் தக்கது (க-246)



சுவாமி விவேகானந்தரின் ஆன்மீக எழுச்சி விழா அண்மையில் ஸ்ரீ துர்க்க மணிமண்டபத்தில் நடைபெற்றபோது கொழும்பு இராம கிருஷ்ணன் மிஷன் சுவாமி ஆத்மகானந்தா விழாவில் உரையாற்றுவனதயும் பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா, நல்லை திருஞான சம்ந்த ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர. பரமர்ச்சாரி சுவாமிகள் மதுரகவி காரை எம்பி அருளானந்தம் ஆகியோர் அமர்ந்திருப்பதை படத்தில் கணலாம்.


பாராட்டி வாழ்த்துகின்றோம்

வலி தெற்கு பிரதேச செயலகப் பிரிவில்
தரம் 1 கிராமசேவையாளர்களாக பதவி உயர்வு பெற்ற
திரு. வி. மா. இராமலிங்கம்
திரு. செ. வைத்தியநாதன்
ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்
சுன்னாகம் கிழக்கு, (5715) துரையர் குடும்பம்

# காஸா பகுதியில் 11பலஸ்தீனர் கொலை

## இஸ்ரேலியர் புகுந்து அட்டகாசம்

(டெல்அவில்)

பலஸ்தீன காஸாப் பகுதியில் இஸ்ரேலியத் துருப்புக்கள் மேற்கொண்ட துப்பாக்கித் தாக்குதலில் 11பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதுடன் மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

மேற்குகாஸாப்பகுதியை நேற்று அதிகாலை திடீரென முற்றுகையிட்ட இஸ்ரேலியப் படையினர் பலஸ்தீன நபர்கள் மீது சரமாரியான துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டனர்.


இதன்போதே 11பலஸ்தீனர்களும் கொல்லப்படடனர்.

அத்துடன்அங்குள்ள பாரிய கைத்தொழிற்சாலையொன்றையும் தகர்த்து அழித்துள்ளனர் என்று பலஸ்தீனப்பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நேற்று முன்தினம் இஸ்ரேலிய விமானப்படையின் ஹெலிகொப்டர்கள் காஸாப் பள்ளத்தாக்கில் உள்ள பலஸ்தீனப் போராளிகளின் இலக்குகளில் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இதன் போது பலஸ்தீனத்திலுள்ள உலோகத் தொழிற்சாலை, மற்றும் தேவாலயங்கள் பலத்த சேதமடைந்தன.

இதற்குப் பதிலடியாகப் பலஸ்தீனத்துப்பாக்கி நபர்கள் மறைந்திருந்து நடத்திய தாக்குதலில் 3இஸ்ரேலியச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். (பி-2)



மெல்பர்ன் நகரில் நடைபெற்று வரும் ஆஸ்த்திரேலியன் ஓபன் டென்னிஸ் போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் சகோதரிகள் வீனஸ் வில்லியம்ஸ், செரீனா வில்லியம்ஸ் இணை, ஸ்பெயின் வீராங்கனை ருவானோ சுவாரஸ் இணையை 6-4, 6-4, 6-3 என்ற செட் கணக்கில்வென்று மகளிர் இரட்டையர் சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினர்.

# வானொலி கேட்குமாறு துண்டுப்பிரசுரங்கள்

(பக்தாத்)

அமெரிக்க விசேட படையினரின் வானொலி ஒலிபரப்புக்களைக் கேட்குமாறு ஈராக்கியர்களை வலியுறுத்தும் 3இலட்சத்துக்கும் அதிகமான துண்டுப் பிரசுரங்களை அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ் விமானங்கள் ஈராக்கில் வீசியுள்ளன.

ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைனை விமர்சிப்பதுடன், ஈராக்கின் ஆயுதக்களைவு தொடர்பான ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையின் தீர்மானம் பற்றிய தகவல்களை வழங்கும், அமெரிக்க விசேட படையினரின் வானொலி சேவை ஒலிபரப்பும் அலைவரிசைகளும் இத்துண்டுப் பிரசுரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (பி-2)

# வடகொரியாவுடன் சரியான நேரத்தில் நேரடிப்பேச்சு

(வாஷிங்டன்)

சரியான நேரமும் தகுந்த சந்தர்ப்பமும் ஏற்படுமிடத்து, வடகொரியாவுடன் நேரடிப்பேச்சு வார்த்தையில் அமெரிக்கா கலந்துகொள்ளுமென அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின்பவல் கூறியுள்ளார்.

வடகொரியாவின் அணுத்திட்டங்கள்தொடர்பான விடயங்கள் தற்போது ஓரளவுக்குத் தணிந்துள்ளதெனக் குறிப்பிட்ட இராஜாங்க அமைச்சர்,

இதற்காகப் பேச்சுக்கள் நடத்த வேண்டிய தகுந்த நேரம் வரும்போது பேசித்தீர்க்கப்படுமெனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வடகொரியா முழு அளவிலான அணு ஆயுதத்தயாரிப்பை ஆரம்பித்தால் அது அமெரிக்காவின் பாதுகாப்பிற்குப் பாரிய அச்சுறுத்தலாக அமையுமென்றும்.

இதனைத் தவிர்க்க புஷ்நிர்வாகம் நேரடியாகவும் தீர்க்கமாகவும் வடகொரியாவுடன் பேசவேண்டும் என்று அமெரிக்காவின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சரான வில்லியம் பெர்ரிக் கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி பிலகிளின்ரனின் காலத்தில், வடகொரியாவுடனான விடயத்தில் வில்லியம் பெர்ரிக் முக்கிய பங்கு வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (பி-2)

# நாகா தீவிரவாதிகளுடனான பேச்சில் முன்னேற்றமில்லை

(புதுடில்லி)

நாகா தீவிரவாதிகளுக்கும் இந்திய அரசுக்கும் இடையே கடந்த மூன்று நாட்களாக நடந்து வந்த பேச்சு வார்த்தைகள் திருப்தியற்ற முறையில் முடிவுக்கு வந்துள்ளது.

இப்பேச்சுவார்த்தையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை இதனால் பேச்சு வார்த்தைகள் இன்னும் தொடரலாம் என்று நாகாதேசிய சோஷலிச கவுன்சில் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த தலைவர்களுடன் இந்தியா கடந்த 21ஆம் திகதிமுதல் நடத்திய பேச்சுவார்த்தை முடிவுக்கு வந்த போதும்,

ஆயுதங்கள் எதனையும் கைவிடுவது தொடர்பாக நாகா தீவிரவாதிகள் எந்த உறுதிமொழியையும் வழங்கவில்லை என்றும் இருதரப்பினருக்குமிடையில் ஒரு தீர்க்கமான முடிவு ஒன்று எட்டப்படும் வரை அமைதியையும், வன்முறையற்ற சூழ்நிலையையும் பேணிக் காப்பது என்று இருதரப்பினரும் இணங்கியுள்ளனர்.

அதேவேளை இந்த இரு தரப்பினர்களுக்குமிடையிலான அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை எப்போது இடம்பெறுமென்று இதுவரை தீர்மானிக்கப்படவில்லை. (பி-2)



மும்பையின் தெற்குப் பகுதியில் ஐந்து மாடிக் கட்டடத்தின் ஒரு பகுதி திடீரென்று இடிந்து விழுந்ததில் ஒருசிறுமி கொல்லப்பட்டாள். 24பேர் படுகாயமைடந்தனர் இடிபாடுகளில் சிக்கியுளளவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ள மீட்புப் படையினரையே இங்கு காண்கிறீர்கள்.

WORLD NEWS உலக தரிசனம்



மெக்ஸகோ நாட்டின் கொலிமா கடற்கரை மாகாணத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 7.6என்கின்ற அளவிற்குப் பதிவாகியுள்ள இந்த கடும் நிலநடுக்கத்தில் பலர் உயிரிழந்தனர். பலவீடுகள் தரை மட்டமாகியுள்ளன.

# போரைத் தவிர்க்கும் பொறுப்பு ஈராக்கிடமே உள்ளது.

## 5வளைகுடா நாடுகள் கருத்து

(இஸ்தான்புல்)

யுத்தத்தைத் தவிர்ப்பதற்கான பெரிய பொறுப்பு ஈராக்கிடமே உள்ளது என்று துருக்கி கூறியுள்ளது. யுத்தம் ஏற்பட்டால் அண்டை நாடுகளிடமிருந்து அதிக உதவிகளை ஈராக் எதிர்பார்க்க முடியாது என்று துருக்கி கூறியுள்ளது.

ஈராக்கிய அதிபருக்கு கடுமையான குறிப்பொன்றை அனுப்புவதற்கு ஐந்து அரபுநாடுகளும் துருக்கியும் இஸ்தான்புல்லில் கூடியிருக்கும வேளையில், ஈராக் ஐ.நா. 1441ஆவது தீர்மானத்தின்படி நடந்து கொள்ள வேண்டும் இல்லையெனில் அதன் எதிர்விளைவுகளை எதிர்கொள்ளத் தயாராக வேண்டும் என்றவாறு ஒரு செய்தி சதாம்ஹுசேனுக்கு அனுப்பப்படவிருப்பதாகத் தெரிகின்றது.

மத்தியகிழக்கில் நிலவும் நிலைமையானது எல்லா இடங்களுக்கும் பரவக்கூடிய அபாயத்தைக் கொண்டிருக்கிறது என்று துருக்கிய பிரதம மந்திரி அப்துல்லாகல் கூறினார்.

''அமைதிக்கு ஈராக்பெரும் எடுப்பில் உதவிடமுடியும் அதற்கான பாரியபொறுப்பு அதனிடமே தங்கியுள்ளது என்று தெளிவாகக் கூறவிரும்புகின்றேன்'' என்றார் அப்துல்லா.

துரதிருஷ்டவசமாக ஈராக்கிய தலைமை தவறுகளைக் கடந்த பத்து பதினைந்து ஆண்டுகளாக செய்து வந்துள்ளது. இதனால் பெரும் இரத் தக்களரியும் கண்ணீரும் பெருகி யோடியிருக்கிறது என்றார் அவர்.

ஈராக் மீது அழுத்தத்தை ஏற்படுத்துவதற்காக இந்தக் கூட்டம் நடைபெற்றாலும் ஈராக்கியப் பிரச்சினை சர்வதேச சமூகத்தால் ஐ.நா ஆதரவுடன் தீர்க்கப்பட வேண்டும் என இந்த நாடுகள் விரும்புகின்றன.

துருக்கி, ஜோர்டான், சவூதி அரேபியா, எகிப்து, சிரியா ஆகிய நாட்டுத் தலைவர்கள் இம்மாநாட்டில் கலந்துகொள்கின்றார்கள் (பி)

## சௌந்தரராஜன் பத்மபூஷண் ஆகின்றார்

(புதுடில்லி)

இந்தியக் குடியரசு தினமான நேற்று 34பேருக்கு பத்மபூஷண் விருதுகளும் 54பிரமுகர்களுக்கு பத்ம ஸ்ரீ விருதுகளும் வழங்கப் பட்டன.

பின்னணிப் பாடகர் சௌந்தரராஜன், பரதநாட்டியக் கலைஞர் பத்மாசுப்ரமணியன், கவிஞர் வைரமுத்து உட்பட மொத்தம் 88பேருக்கு பத்ம பூஷண் மற்றும் பத்ம ஸ்ரீ விருதுகள் வழங்கப்பட்டது. (பி-2)

# எவரெஸ்ட் உச்சியை எட்ட 12 குழுக்களுக்கு அனுமதி

(காத்மண்டு)

உலகின் உயரமான எவரெஸ்ட் சிகரம் மீது ஏறும் முயற்சியில் ஈடுபட 12நாடுகளின் குழுக்களுக்கு அனுமதி அளித்துள்ளது நேபாளம்.

மேலும் 5குழுக்களும் மலையேற விண்ணப்பித்துள்ளன.

எவரெஸ்டில் முதல்முதலாக மனிதன் காலடி வைத்த 50ஆவது ஆண்டு கொண்டாடப்படுகிறது.

8ஆயிரத்து 848மீற்றர் உயரமுள்ள் எவரெஸட் சிகரத்தைத் தொடுவதற்கான முயற்சிக்கு இக்காலம் தான் பாதுகாப்பானதாகக் கருதப் படுகிறது.

அனுமதி அளிக்கப்பட்டுள்ள 12குழுக்கள் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இத்தாலி, ஜப்பான், நேபாளம், ருமேனியா, தென்னாபிரிக்கா, தென்கொரியா, தாய்லாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவை.

முதல்முறை எவரெஸ்ட்டை முதன்முதலில் எட்டியவர் எட்மண்ட் ஹிலாரி. எட்டிய நாள் 1953ஆம ஆண்டு மே - 29.

அவருக்குப் பின் 1250க்கும் மேற்பட்டோர் எவரெஸ்டை வெற்றிகரமாக அடைந்திருக்கின்றனர். தற்போது உயிருடன் இருக்கும் அனைத்து எவரெஸ்ட் சாதனையாளர்களையும் கொண்டாட்டங்களுக்கு அழைத்திருக்கிறது நேபாளம். (பி)

# அரசு- புலிகள் பேச்சுக்கு ஆதரவு என்ற பேச்சுக்கே இடமில்லை

## பொ. ஐ. மு செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி, மக்கள் விடுதலை முன்னணியுடன் கூட்டுச் சேருமாயின் கட்சியில் பாரிய மாற்றங்களை மேற்கொள்ள நேரிடும்.

இவ்வாறு பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளர் நாயகம் டி. எம். ஜெயரட்ண சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ் விரு கட்சிகளின் இணைவு தொடர்பாகமேலும் கருத்து தெரிவித்த டி. எம். ஜெயரட்ண,

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கும் இடையில் நடைபெற்று வரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு பொதுஜன ஐக்கிய முன்னணி ஒரு போதும் ஆதரவு வழங்காது

இவ்விரு கட்சிகளும் அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகள் தொடர்பாக விரிவான பேச்சுக்களை நடத்தவுள்ளன.

அந் நிலையில் குறிப்பிட்ட ஒரு கட்சிபொது ஜன ஐக்கிய முன்னணியுடன் சேர்ந்து கொள்ள விரும்பினால், கட்சியின் ஆலோசனைகளுக்கும், யாப்பு விதிகளுக்கும் ஏற்ற வகையில் அக்கட்சி தன்னைத் தானே மாற்றிக் கொள்ளும் அவசியம் ஏற்படாது.

பொதுத் தேர்தல் ஒன்று நடக்கும் போதுஇவ்விரு கட்சிகளும் கூட்டாக இணைந்து போட்டியிடுவதன் மூலம்பெரு வெற்றிக்கு வித்திடலாம் என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, இவ்விரு கூட்டணிகளின் இணைவு குறித்து ஜனாதிபதி தலைமையில் சந்திப்புக்கள் நடைபெற்றமையும்,

இச் சந்திப்புத் தொடர்பாக டி எம். ஜெயரட்ண பல்வேறு சந்தேகங்களை ஏற்கனவே எழுப்பி இருந்தமையும் சுட்டிக் காட்டத்தக்கது.

(உ-10, 8)

## ஐ. நா. அலுவலகம் அம்பாறையில் அமையும்

(மட்டக்களப்பு)

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அலுவலகம் நாளைசெவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய உதவும் வகையிலேயே இவ் அலுவலகம் திறக்கப்படவுள்ளது

யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் நடைமுறையில் இருந்து வரும் இந்தத் திட்டம் மட்டக்களப்பு மாவட்டத்திலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

கிளிநொச்சியிலும் ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகம் திறக்கப்படவுள்ளதாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பணிப்பாளர் மிட்ஸ்காசன் தெரிவித்துள்ளார்.

(உ-8)

## நீடிக்கப்பட்டுள்ளது

பலரின் வேண்டுகோளுக்கிணங்க ஆறாம் தர மாணவர்களின் கட்டுரைப் போட்டி விண்ணப்ப திகதி 30 - 01 - 2003 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

## மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

பாடசாலை மாணவர்களுக்காக மாதமொரு கட்டுரைப் போட்டி.

**பரிசில்கள்**

1 ஆம் பரிசு ரூபா 500
2 ஆம் பரிசு ரூபா 250
3 ஆம் பரிசு ரூபா 150

மற்றும் தகுதியான கட்டுரைகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

★ அமரர் ச அம்பிகைபாகன் (முன்னாள் அதிபர் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி) அவர்கள் ஞாபகார்த்தமாக இப் பரிசில்கள் வழங்கப்படும்,

**போட்டியின் விதிகள்:**

★ ஆறாந்தரத்தில் இப்பொழுது கற்கும் மாணவர்கள் மட்டும் இப் போட்டியில் பங்கு பற்றலாம்;

★ கட்டுரையின் தலைப்பு ''எமது கிராமம்''

★ கட்டுரை 100 தொடக்கம் 125 சொற்களுக்குள் அமைதல் வேண்டும்:

★ புஸ்காப்தாளில் ஒவ்வொரு தனிப் பக்கத்தில் எழுதப்படல் வேண்டும்;

★ கட்டுரைகள் 30 - 01 - 2003ற்கு முன்னதாக ''மாணவர் கட்டுரைப் போட்டி'' வலம்புரி, 15 வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின் வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்,

**இணைக்கும் பத்திரம்**

**கட்டுரைப் போட்டி இல-1**

மாணவர் முழுப் பெயர் ______________

பாடசாலை ______________

கற்கும் தரம் ______________

உறுதிப்படுத்துகிறேன் ______________

வகுப்பாசிரியர்

## பண்ணைப் பாலம் சேதம்

(ஊர்காவற்றுறை)

யாழ் பண்ணைப் பாலம் சேதமடைந்த நிலையில் கவனிப்பாரற்று காணப்படுவதாக பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பாலம் கடந்த வருடம் ஆரம்பத்தில் புனரமைக்கப்பட்டது. இப் பாலம் தொடர்ந்து பராமரிக்கப்படாமையினால் சேதமடைந்து காணப்படுகின்றது.

இதனால் பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் பாலத்தில் பொருத்தப்பட்டிருந்த கம்பிகள், தகரங்கள் சேதமடைந்துள்ளன. (க-75)

## பொலிஸ் சேவையில் மூவாயிரம் தமிழர்களை உள்ளீர்க்க முயற்சி

(கொழும்பு)

பொலிஸ் திணைக்களத்தில் நிலவும் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் மூவாயிரம் தமிழர்களை பொலிஸில் இணைக்க முயற்சி எடுத்து வருவதாக பொலிஸ்மா அதிபர் ரி. ஈ. ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்துக் கூறிய ஆனந்தராஜா,

பொலிஸ் திணைக்களத்தில் 10 ஆயிரம் வெற்றிடங்கள் நிலவுகின்றன. வெற்றிடங்களை நிரப்பும் போது கணிசமான அளவு தமிழர்களும் இணைக்கப்படுவர். இதற்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன.

நாட்டில் தற்போது அமைதிச் சூழல் ஏற்பட்டிருப்பதால் தமிழ் இளைஞர்களை பொலிஸ் சேவையில் இணைந்து பணியாற்ற முடியும் என்று நம்பிக்கை வெளியிட்டார் (உ)

## தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அக்கரைப்பற்றில் அலுவலகம் திறப்பு

(கொழும்பு)

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அக்கரைப்பற்று கோளாவில் பகுதியில் புதிய அலுவலகம் ஒன்றை திறந்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் அதன் அபிவிருத்தி நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் நோக்குடன் இவ்வலுவலகம்திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் கிளிநொச்சியை தலைமைக் காரியாலயமாகக் கொண்டு வன்னிப்பிரதேசத்தில் இயங்கி வந்த தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சமாதானநடவடிக்கைகளின் பின் கிழக்கு மாகாணத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபட்டு வருகிறது:

இவ் அலுவலகத்தின் ஊடாக அம்பாறை மாவட்டத்தில் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுடன், மக்களை மீள் குடியேற்றும் நடவடிக்கைகளிலும் ஈடுபடவுள்ளது.

இவ்வலுவலகத் திறப்பு விழாவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி த ரமேஸ், பாராளுமன்ற உறுப்பினர் அ. சந்திரநேரு, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் மதத்தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-8)

## நீதிபதி நியமனம்

(யாழ்ப்பாணம்)

குடும்ப நீதிமன்ற நீதிவானாகவும், சாவகச்சேரி மாவட்ட நீதிவானாகவும் க.அரியநாயகம் நீதிச்சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் யாழ். மேலதிக மாவட்ட நீதிபதியாகவும், மேலதிக நீதிபதியாகவும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் நியமனமாகவுள்ளார். (க-03)

## புகையிரத புனரமைப்புக்கு ஆறு கோடி நிதி உதவி

### ஐரோப்பிய யூனியன் வழங்கும்

(மட்டக்களப்பு)

ரயில் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட கட்டடங்களையும், புகையிரத நிலையங்களையும் புனரமைப்பு செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றியம் ஆறு கோடி ரூபா நிதியுதவியை வழங்கியுள்ளது

இந் நிதியுதவியின் கீழ் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட இலங்கை புகையிரதத் திணைக்களத்துக்கு சொந்தமான கட்டடங்கள், புகையிரத நிலையங்கள், நிலைய அதிபர்கள் மற்றும் ஊழியர்களுக்கான விடுதிகளும் புனரமைக்கப்படவுள்ளன.

வாழைச்சேனை, கல்குடா தேவபுரம், ஏறாவூர், மட்டக்களப்பு, புனானை ஆகியஇடங்களில் உள்ள கட்டடங்களேமறுசீரமைக்கப்படவுள்ளன.

இதற்கிடையில் புனானை புகையிரத நிலையத்தில் இராணுவத்தினர் முகாம் இட்டுள்ள காரணத்தால். அப்பிரதேச மக்களின் நலன்கருதி ரெஜிதென்ன பகுதியிலும், கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களின் நலன்கருதி வந்தாறுமூலை பகுதியிலும் புதிதாக புகையிரத நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. (க-08)

## சடலத்தை வீச முயன்ற சீனர்கள் சிக்கினர்

(கொழும்பு)

வாகனத்திலிருந்து சடலம் ஒன்றினை வீச முயன்ற இரு சீனர்களை மக்கள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

தெகிவளையிலுள்ள பிரபல விடுதியில் கொலை செய்யப்பட்டசடலத்தையே சீனர்கள் வீச முயன்றனர். இக் கொலைகள் ஏன்?, எதற்காக? எப்போது? செய்யப்பட்டன என்பது தொடர்பான விபரங்களை இரு சீனர்களும் கூற மறுத்துவருகின்றனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்:

இக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவரை கைது செய்துள்ள பொலிஸார் முச்சக்கர வண்டியொன்றையும் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பேராதனைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்; (உ-8

## சமஷ்டி ஆட்சிமுறை அறிக்கை ஸ்ரீ. சு. க. செயற்குழுவிடம் கையளிப்பு

(கொழும்பு)

ஜேர்மனி, இத்தாலி, ஒஸ்ரியா, பெல்ஜியம் ஆகிய நாடுகளில் நிலவி வரும் சமஷ்டி ஆட்சிமுறை தொடர்பான விளக்க அறிக்கை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின செயற் குழுவிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது என பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் செனிவரட்ண தெரிவித்துள்ளார்

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்றபேச்சுவார்த்தைகளின் அடிப்படையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, மலையகமக்கள் முன்னணி, தேசிய ஐக்கியக் கட்சி ஆகிய கட்சிகளை சேர்ந்த உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்று கடந்த 15 ஆம் திகதி சமஷ்டி குறித்து ஆராய ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் மேற் கொண்டது.

இக்குழுவினர் ஐரோப்பிய நாடுகளில் சமஷ்டி குறித்த ஆராய்வை மேற்கொண்ட பின்னர் நேற்றுமுன் தினம் நாடு திரும்பினர்;

இது தொடர்பான விபரங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிடம் கையளிக்கப்பட்டது.

சமஷ்டி ஆட்சி முறை குறித்து அனைத்துக்கட்சிகளும் ஆராய்ந்து ஓர் இணக்கப்பாட்டைக் காணமுடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்; (க-08)

# பொ. ஐ. முன்னணி முக்கியஸ்தருக்கு

# நீதிபதி ஸ்ரீபதி அழைப்பாணை

(கொழும்பு)

ஜனாதிபதி குமாரதுங்கவை படுகொலை செய்ய முயற்சிக்கப்படுவதாக லக்மின என்னும் சிங்களப் பத்திரிகையில் வெளிவந்த டிசம்பர் 15 ஆம் திகதி அறிக்கைபற்றி விசாரித்துவரும் சீ. ஐ. டீ. யினர் பொ. ஐ. மு. யின் முக்கியஸ்தரான ஸ்ரீபதி சூரியாராட்சியை திங்களன்று சாட்சியமளிக்க வரும்படி அழைத்துள்ளனர். இவரது மனைவி டிறுக்ஸி பெரேரா 'லக்மின' வின் வெளியீட்டாளராகவிருந்து டிசம்பர் 12 ஆம் திகதி பதவி விலகியவராவார்.

கொழும்புகோட்டை மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த மற்றுமொரு அறிக்கையில் லக்மின பத்திரிகையின் அலுவலர்கள் மிகவும்பொறுப்பற்றவிதத்தில் நடந்துகொள்கின்றனர்எனத்தெரிவித்துள்ளனர். ஜனாதிபதியை படுகொலைசெய்யும் திட்டம் பற்றிய விடயத்தை பிரசுரித்தமைக்கு அவர்களில் எவரும் பொறுப்பில்லை எனக்கூறுகின்றனர் என்று புலன்விசாரணைகள் தெரிவித்துள்ளன. பணியாளர்களும் தமக்குள் தகராறுபட்டுக்கொள்கின்றனர். புதன்கிழமையன்று சீ.ஐ. டீ. யினர் இவர்களின் வாக்குமூலங்களை பதிவுசெய்தனர்.

சீ ஐ. டீ விசாரணையின் போது, தனக்கெதிராக போலி வாக்குமூலங்களை பத்திரிகையின் அலுவலர்கள் அளித்ததனால் தான் வெளியீட்டாளர் பதவியிலிருந்துவிலகி விட்டதாக ரஞ்ஜித் சில்வா தெரிவித்தார்.

இச் செய்திவெளியீட்டப்பட்டது தொடர்பாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் லயனல் குணதிலக சீ. ஐ. டீ. பிரிவினர் பல தடுப்புக்கள் பற்றி விசாரித்து வருகின்றனர்.

டிசம்பர் 12 ஆம் திகதியுடன் வெளியீட்டாளர் பதவியிலிருந்து விலகிவிட்டதாக டிறுக்சி பெரேரா தெரிவித்திருப்பினும், குறித்த செய்தி வெளியாகியிருந்த டிசம்பர் 15 ஆம் திகதி இவரே அப்பதவியில் இருந்ததாக சீ. ஐ. டீ. விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக கொழும்பு ஆங்கில தினசரி ஒன்று தெரிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஈ)

## சுதேச மருத்துவ குழு கண்காணிப்புக் கூட்டம் மட்டக்களப்பில் இன்று

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார சுதேச மருத்துவ அமைச்சின் குழு சார் கண்காணிப்புக் குழுக் கூட்டம் முதல் தடவையாக இன்று மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது.

கடந்த காலங்களில் இக் கூட்டம் திருகோணமலை மாவட்டத்திலேயே நடைபெற்று வந்தது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அமைதியைத் தொடர்ந்து இக் கூட்டம் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டதாக மாகாணசுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (க-08)

## தேயிலையை குளிர்பானமாக மாற்ற சர்வதேசரீதியில் முனைப்பு

(கொழும்பு)

எதிர்காலத்தில் தேயிலையை உணவுப் பானமாக தயாரிக்க சர்வதேச நிறுவனம் முன்வந்துள்ளதாக இலங்கை தேயிலை சபையின் பணிப்பாளர் அபயக்கோன் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இலங்கையில் இரு தனியார் நிறுவனங்கள் தேயிலைப் பானத்தை குளிர்பானமாக சந்தைக்கு அறிமுகப்படுத்தவுள்ளதாகவும்.

இந்நிறுவனங்கள் தேநீரை மென்பானமாக்கும் வகையில் பைக்கற்றுக்களில் தயாரிக்கப்பட்டு உலக சந்தையில் விரைவில் அறிமுகப் படுத்தப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். (க-10)

## வட பகுதி செல்லும் அரசியல் வாதிகளுக்கு பாதுகாப்புஅவசியமில்லை

### எதிர்க் கட்சித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் தற்போதைய ஆட்சியில் வட பகுதிக்கான விஜயத்தை மேற்கொள்ளும் எந்தவொரு அரசியல் வாதிகளோ அன்றி சர்வதேச பிரதிநிதிகளோ எவ்வித பாதுகாப்பும் முன்னேற்பாடுகளும் இன்றி சுதந்திரமாகச் செல்ல முடியும்.

இவ்வாறு எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷா தெரிவித்துள்ளார்.

கடந்த 20ஆம் திகதி இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனின் அழைப்பை ஏற்று யாழ்ப்பாணம் விஜயம் செய்திருந்தார்.

யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைப்பாடு தொடர்பாக ஆராய்ந்தும் கண்ணுற்றும் கேட்டறிந்து கொண்டவற்றையும் வைத்துக் கொண்டே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடபுல [illegible] நம் [illegible] ல் அரசியல் செ[illegible] மொன்று ஆரம்பிக்கப்பட[illegible]ண்டும்.

வடக்கு பிரதேசங்களில் உள்ள தமிழ்மக்கள் தென் பகுதிமக்களுடன் ஒன்றிணைந்து சமாதானமான முறையில் வாழ்வதற்கான எதிர்பார்ப்புகளை இன்று வரை கொண்டிருக்கின்றனர்.

அத்துடன், பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவினால் சமாதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதும், அரசாங்கத்தாலும் தமிழீழவிடுதலைப் புலிகளின் தலைவரினதும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஒரு வருட காலம் பூர்த்தியடையும் நிலையில் உள்ளது.

ஆனால், யாழ்ப்பாணத்தில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி நடவடிக்கைகள் எவையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (க-08)

## தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாணல் இதுவே எமது ஒரே குறிக்கோள்

### பத்திரிகையாளர் மாநாட்டில் ரவிராஜ்

(யாழ்ப்பாணம்)

தமிழர் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதே எம் இலக்கு என்கிறார் தமிழர் விடுதலை கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ்.

நேற்று காலை 10.00 மணிக்கு யாழ் ஸ்ரான்லி வீதியில் உள்ள தமிழர் விடுதலை கூட்டணியின் அலுவலகத்தில் இடம் பெற்ற மாதாந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர்; கூட்டணியினரின் பிரச்சினை ஒட்டுமொத்த தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதே.

எம்கடமை தமிழர் பிரச்சினைகளைதீர்வுக்கு கொண்டுவருவதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசு முன்னெடுத்து வரும் சமாதான முயற்சிக்குஒத்துழைப்பு நல்குவதே கூட்டமைப்புக்கு பொதுக்கொள்கைகள் உள்ளன.

ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தனித்துவம் தொடர்ந்தும் பேணப்படும்.

தமிழர்களின் பிரச்சினைகளை தீர்க்க நான் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றேன் என்றார்.

உயர் பாதுகாப்பு வலயம் சம்பந்தமாக அரசுடன் கலந்தாலோசிப்பதற்காக நாம் கலந்துகொண்ட எந்த கூட்டத்திலும் அமைச்சர் மகேஸ்வரன் கலந்துகொள்ளவில்லை.

நான் தேர்தலில் நிற்கும் போது (2001 ம் ஆண்டு) சிறைகளில் 1000 தமிழ் கைதிகளே இருந்தனர். ஆனால் தற்போது 100 கைதிகளே உள்ளனர்.

இக் கைதிகள் விடுதலை செய்து வெளியேறும் வரை தாம் அவர்களை வெளிக் கொண்டுவரும் முயற்சியை கைவிடப்போவதில்லை எனவும் கூறினார்.

மேலும் அதிஉயர் பாதுகாப்பு வலயங்களில் தம் வீடுகள் உள்ளதால்அவற்றில் குடியமர முடியாத மக்களுக்காக நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் ஆனால் அவர்களை அவர்தம் சொந்த இடம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் குடியமர்த்துவதை நான் ஒரு போதும் அனுமதிக்க மாட்டேன் எனவும் கூறினார்.

இது தொடர்பாக யாழ் மாவட்ட இராணுவ தளபதி சரத் பொன் சேகாவிடம் தான் எழுப்பிய கேள்விகளையும் அதற்கு அவர்கள் மௌனம் சாதித்ததனையும் கூறினார்.

மேலும் மிருசுவிலில் படுகொலை சம்பந்தமான வழக்கு தாக்கலுக்காக கொழும்பு உயர் நீதிமன்றத்திற்கு செல்ல அஞ்சும் சாட்சிகள் மற்றும் உறவினர்களை தம்முடன் தொடர்புகொள்ளுமாறும் அதற்கான நடவடிக்கைகளை தான் மேற்கொள்வதாகவும் உறுதி அளித்தார்.

அவ்வாறு கொழும்புசெல்வோருக்கான தங்குமிடம் மற்றும் இதர வசதிகளை தானே செய்து தருவதுடன் அவர்களுக்கான பாதுகாப்பு உதவியையும் தான் செய்து தருவதாகவும் தெரிவித்தார்.

இவ் விடயம் அரசாங்கத்திற்கும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் இடையேயானபிரச்சினைஎனவே இதில் தான் நீதிமன்றத்திற்கு ஆஜராகமுடியாது எனவும்ஆனால் சகல உதவிகளையும் வழங்குவதாகவும் கூறினார். (க-43-4)

## மானிப்பாய், சங்கானையில் கடந்த வருடத்தில் மட்டும் 41 சிசுக்கள் மரணம்

(சுதுமலை)

மானிப்பாய், சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த வருடம் 41 சிசுமரணங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இப் பிரதேச சனத்தொகைப்படி 33% ஆக காணப்படுவதாவும் இலங்கையின் தேசிய சிசு மரணவீதம் 19%ஆகவும் இருப்பதாகவும் இதனுடன் ஒப்பிடும்போது இப்பகுதியின் சிசுமரணவீதம் கூடுதலாக இருப்பதாகவும் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.கணேஸ்வரராஜா கவலை தெரிவித்துள்ளார்.

அண்மையில் சுகாதார உத்தியோகத்தர்கள் மத்தியில் உரையாற்றிய வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்ததாவது; எமது பகுதிகளில் கூடுதலாக நடைபெறும் சிசு மரணங்களுக்கு சுவாசத் தொற்றுகளே காரணமாகும் எனவும் அது ஏற்படுவதை தடுப்பதற்கு இந்த வருடத்தில் சில முன்னேற்பாடுகளை செய்து கொள்ளவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

மேலும் சில குழந்தைகள் பிறக்கும் போது மிகவும் குறைவான நிறையில் பிறக்கும் குழந்தைகளும் இறக்கின்றன எனவும் இவ்விடயத்தில் கர்ப்பகாலப் பராமரிப்பில் இது தொடர்பான ஆலோசனைகளை தாய்மார்களிற்கு அறிவூட்டவேண்டும் எனவும் கர்ப்பகாலத்தில் போசாக்கான உணவை உட்கொள்ளுதலின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

மேலும் எமது பகுதிகளில் குடும்பநல சுகாதாரசேவை உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை, சிகிச்சைநிலையங்களிற்கு தாய்மார் சரியாக வராமை மற்றும் இளம் வயதில்ஓர்பெண் கர்ப்பம் தாங்குதல் போன்றவையும் சிசு மரணத்திற்கு காரணமாக அமைந்து விடுகிறது எனவும்நிறை குறைவான, இரட்டைக் குழந்தைகள் பிறப்பதும் இச்சிசு மரணத்திற்கு காரணமாகலாம் எனவும் தெரிவித்தார்.

எனவே சிகிச்சை நிலையத்தில்இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் சுகாதாரத் தொண்டர்கள் மூலம் கிராமமட்டத்தில்சமூக விழிப்புணர்வு நிகழ்வுகளை சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள், பெண்கள்அமைப்புகள் ஊடாக ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் எனவும் வைத்திய அதிகாரி தெரிவித்தார். (க-252)

## நிதி வழங்கல் எழுச்சி வாரம்

(ஈச்சமோட்டை)

புதுமை அன்னை ஆலயத்தின் கட்டடங்கள் அழிவுறும் நிலையில் உள்ளமையால் அவற்றை புனரமைத்து மெருகூட்டுவதற்காக பெப்ரவரி மாதம் 3ஆம், 4 ஆம், 5ஆம் திகதிகளில் நிதி வழங்கல் எழுச்சி வாரம் அனுஷ்டிக்கப் படவுள்ளது.

இவ் ஆலயம் பழமை வாய்ந்ததும், யாத்திரத் தலமுமாக இருப்பதுகுறிப்பிடத்தக்கது. (க-59)

## கிராம அலுவலர்கள் தரம் உயர்வு

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேச செயலர் பிரிவைச்சேர்ந்தஏழு பேருக்கு தரம் i இற்கான கிராம சேவை அலுவலர்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதாகவும், 2 ஆயிரம் ஆண்டு 06-ம் மாதத்திலிருந்து இப்பதவி உயர்வு வழங்கப்பட்டதாக சம்பந்தப்பட்டோருக்குஅனுப்பப்பட்ட கடிதத்தில்தெரிவக்கப்பட்டுள்ளது.

தரம் i கிராம சேவையாளர்களாக தரம் உயர்த்தப்பட்டோர் விபரம் வருமாறு; வி.மா.இராமலிங்கம், க.திருநாவுக்கரசு, செ.வைத்தியநாதன், க.இரவீந்திரன், எஸ்.இரவீந்திரன், செ.ஞானசபேசன், திருபுலேந்திரராசா ஆகியோராவர். (ஈ)

## புதையல் எடுக்கச் சென்றோர் பொலிசாரால் கைதாகினர்

### மொறவெவவில் சம்பவம்

(கொழும்பு)

மொறவெவ அரசாங்கப் பாதுகாப்புவனப் பகுதியில் புதையல் ஒன்றை எடுக்கச் சென்ற கொள்ளைக் கோஷ்டியினர் 5 பேரை பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

புதையலை எடுக்கச்சென்ற குழுவில் பொலிஸ்அதிகாரி ஒருவரும் உள்ளார்என மொறவெவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இப்புதையல் சம்பவத்தில் பொலிஸ் அதிகாரிஉட்பட மொத்தம் 8 பேர் ஈடுபட்டுள்ளனர்என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது எனவும் அவ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

புதையலை சமபங்காக பிரிப்பதில் ஏற்பட்ட சர்ச்சைகளை அடுத்து, கொள்ளைக் கோஷ்டியை சேர்ந்தஒருவர் அதே குழுவைசேர்ந்த ஒருவரால் தாக்கப்பட்டார்.

தாக்குதலுக்கு இலக்கான அந் நபர் பொலிஸாருக்கு கொடுத்த முறைப் பாட்டினை அடுத்தே இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புபட்ட மேலும் இரு பொலிஸார் உட்பட மூவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (க-08)

# எழுத்துலகில் தடம்பதித்து இலக்கியத்திற்குப் பெருமை சேர்த்த (சிற்பி) சிவசரவணபவன்

**ஐம்பது வருடங்களுக்கு மேல் கலை இலக்கியத்துறையுடன், சஞ்சிகை வெளியீடு, கல்வித்துறை ஆகியவற்றில் சாதனை படைத்து வரும்''சிற்பி'' சி.சரவணபவன் அவர்களைக் கௌரவிக்கும் முகமாக வடக்கு-கிழக்கு மாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் அமைச்சின் 2002ஆம் ஆண்டுக்கான கௌரவ ''ஆளுநர் விருது'' அண்மையில் வழங்கப்பட்டது.**

இலங்கையில் தரமான இலக்கிய கர்த்தாக்களை விரல் விட்டு எண்ணினால் அவர்களுள் சிறந்த ஒருவர் சிவசரவணபவன் (சிற்பி). சுன்னாகத்தைச் சேர்ந்த கந்தரோடையிலே 1933 இல் பிராமண குலத்திலே பிறந்த இவர், கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையிலும் ஸ்கந்தவ ரோதயாக்கல்லூரியிலும் கற்று சென்னைக் கிறிஸ்தவக்கல்லூரியில் சரித்திரத்தை விசேட பாடமாகக் கொண்டு பட்டதாரியானார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்விடிப்ளோமா பட்டத்தையும் யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தில் கல்வித்துறையில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றார்.

தனது 14 ஆவது வயதில் எழுத்துலகில் கால் பதித்தவர், 1947 இல் பழம்பண்பைப் பற்றிப் பகர்வதில் பயனில்லை என்ற அவரது முதலாவது கட்டுரை சுதந்திரனில் வெளியாகியது. அதேபோன்று 1951இல் அவரது முதலாவது சிறுகதையான ''மலர்ந்தகாதல்'' சுதந்திரனில் வெளிவந்தபோது தான் சிற்பியின் ஆழமான இலக்கியப்புலமையை எழுத்துலகம் அறிந்தது. இலக்கிய உலகிலே சரவணபவன் என்றால் தெரியாதவர்கள் யாரும் இருக்கலாம். ஆனால் 'சிற்பி' என்றால் தெரியாதவர்கள் இருக்க முடியாது.

### கலைச்செல்வி சஞ்சிகை

எட்டாண்டுகள் தொடர்ச்சியாக இவர் கலைச்செல்வி என்ற மாத சஞ்சிகையை வெளியிட்டார். ஈழத்தில் இருந்து தரமான சஞ்சிகைகள் வெளிவர வேண்டும் என்ற பேராசையினால்'கலைச்செல்வி'என்ற சஞ்சிகையை நடத்தி வெற்றி கண்டார். இதன்மூலம் இலக்கிய உலகில் புகுந்தவர்கள் பலர். இன்றுள்ள எழுத்தாளர்கள் பலர் இவரது ''கலைச் செல்வி'' பண்ணையில் வளர்ந்தவர்கள். கலைச்செல்வி சஞ்சிகை மூலம் பல புதுமைகளைச் செய்தவர்.

'எழுத்துலகில் நான்' என்ற தலைப்பில் ஈழத்தின் பிரபல எழுத்தாளர்களையெல்லாம் எழுதச்செய்



தார்.

'என்னை உருவாக்கியவர்கள்' என்ற தலைப்பில் ஈழத்தின் பிரபல எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தினார்.

''என்னைக் கவர்ந்த என் கவிதை'' என்ற தலைப்பில் பல்வேறு கவிஞர்களையும் அவர்கள் கவிதைகளையும் களத்துக்குக் கொண்டு வந்தார்.

'நம் நாட்டு வாசகன்' என்ற தலைப்பில் வாசகர்களுக்கும் எழுத்தாளனுக்குமிடையே உறவை உண்டு பண்ணினார். அது மட்டுமல்ல வாசகர்களின் பாராட்டுக்கடிதங்களை எழுததாளர்களுக்கு அனுப்பி வைத்து அவர்களிடையே ஒரு பாலத்தையும் அமைத்தார்.

'ஏன் மறைத்தேன் என் பெயரை' என்ற பகுதியினூடு பல புனை பெயர் எழுத்தாளர்களை அம்பலத்துக்கு கொண்டு வந்தார்.

'இலக்கிய மணி மண்டபம்' என்ற பகுதி மூலம் ஏராளமான நூல்களை ஏற்றத் தாழ்வின்றி விமர்சனம் செய்வித்தார்.

இவ்வாறாக ''கலைச்செல்வி'' சஞ்சிகை மூலம் பல புதுமைகளைச் செய்தார்.

### நூல்கள் வெளியீடு

கவிதைச் செல்வம்-மறக்குடி மாண்பு-எழிலிகாவியம்-கொழும்புப் பெண்- (நகைச்சுவை நூல்) நல்லூர் நான்மணிமாலை (கவிதை) விழிச் சுடர்(குறுநாவல்) சின்னஞ்சிறுகதைகள் ஆகிய நூல்களை இவர் பதிப்பித்துள்ளார்.

'உனக்காகக் கண்ணே' சிந்தனைக் கண்ணீர்' 'அன்பின் குரல்' ஆகியன இவரது நாவல்கள் ஆகும்.

தமிழகத்தில் இருந்து வெளிவந்த 'தீபம்' கலை இலக்கிய சஞ்சிகையின் ''யாழ்வாசி'' என்ற பெயரில் இலங்கைக்கடிதம் மூலம் ஈழத்துக் கலை இலக்கிய முயற்சிகளைத் தமிழ் நாட்டில் அறியவைத்தார்.

சென்னையில் பட்டப்படிப்புக் காகச் சென்ற போது சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரி செலெயூர் தமிழ்மன்றத்தின் 'இளந்தமிழன்' என்ற சஞ்சிகையின் ஆசிரியராக இருந்து அதனை முதன்முதலில் அச்சில் வெளியிட்டார். அவரின் தமிழ்த் திறமைக்காக 1955 இல் அக்கல்லூரி அவருக்குத் தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவித்தது.

### சிறுகதைகளும் நாவல்களும்

சிற்பி ஐயாவின் சிறுகதைகளும் நாவல்களும் ஈழத்துப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் தமிழகத்தின் கலைமகள்-மஞ்சரி-தீபம்-கல்கி போன்ற சஞ்சிகைகளிலும் வெளிவந்தன.

இலங்கை எழுத்தாளர்கள் பன்னிரண்டு பேரின் சிறுகதைகளைத் தொகுத்து ஈழத்து சிறுகதைகள் என்ற பெயரில் நூலாக்கி இலங்கைத் தமிழ் எழுத்தாளரின் திறமையை தமிழ் கூறும் நல் உலகிற்கு முதன் முதலில் எடுத்துக்காட்டினார்.

அவருக்கு வடக்கு கிழக்கு மாகாணக்கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் 2002 ஆம் ஆண்டுக்கான கௌரவ ஆளுநர் விருது சமீபத்தில் வழங்கப்பட்டது.

தமிழ் உலகுக்கும் சைவ உலகுக்கும் அவர் தமது கட்டுரையால்- சிறுகதையால்- நாடகத்தால்-நாவலால் பேச்சால் காட்டிய நல்வழிகள் போற்றுதற்குரியன. பழமைக்குப் பழமையாய் புதுமைக்குப் புதுமையாய் அவர் வாழ்ந்து காட்டி எம்மையும் வாழ்விக்கும் முறை சிறப்பானது. எழுத்துலகில் காலத்

**நயினை கி.கிருபானந்தா**

துக்கேற்ற புதுமையும் பொலிவும் குன்றாமல் எழுதி எல்லோர் உள்ளத்திலுமமர்ந்த உத்தமனாய் வாழ்ந்து வருகின்றார்.

கடமை உணர்விலும் பண்பாட்டிலும் தெய்வ நம்பிக்கையிலும் சிறந்து விளங்கி தான் பெற்ற அந்த அனுபவங்களைத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழிகாட்டிய வகைகளும் எம்மவர் நன்றியோடு நினைவு கூரத்தக்கன.

**''வீழ் நாள் படா அமை நன் காற்றின் அஃதொரு வன் வாழ்நாள் வழியடைக்கும் கல்''**

என்றார் வள்ளுவர். அவரின் பொன் மொழிக்கேற்பத் தமது வாழ்நாள்களை வீழ்நாள்களாக்காது முதுமையிலும் அயராது பணியாற்றி வரும் சிற்பி ஐயா அவர்களின் வாழ்நாள் வீழாது முடிவின்றி நீண்டு கொண்டேயிருக்கும் படி வேண்டிடுவோம்!

## ஊர்காவலர் பகுதியில் 4 கி.சேவையாளர் தரம்உயர்வு

(காரைநகர்)

திறமை அடிப்படையில் கிராம சேவை உத்தியோகத்தர் தரம்(I) இற்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் 4 கிராம சேவை யாளர்கள் தரமுயர்த்தப்பட்டுள்ளனர்.

ஐ.க. நடேசன் J/ 46 கிராம சேவையாளர், தி. சண்முகசுந்தரம் J/40 கிராம சேவையாளர், க.சிவலிங்கம் J/48 கிராம சேவையாளர், அ.கனகசபாபதி J/ 42கிராம சேவையாளர் ஆகிய நால்வருமே பதவி உயர்த்தப் பட்டவர்களாவர்.

இவர்களிற்கான அறிவிப்புக் கடிதங்கள் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (பி-246)

## இன்று முதல் நேர்முகப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

மாகாண எழுதுநர் மற்றும் அதனோடு இணைந்த சேவை களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை இன்று திங்கள் முதல் புதன்கிழமை வரை யாழ். பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக சம்பந்தப்பட்ட திணைக்களம் அறிவித்துள்ளது. (க-03)

## துளிர் சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சிறுவர் பாதுகாப்பு நிலையத்தின் சிறுவர் ஊடகத்துறை நேற்று முன் தினம் 'துளிர்' என்னும் சஞ்சிகையை வெளியிட்டுள்ளது.

இத்துளிர் சஞ்சிகையானது சிறுவர்களின் சமகால நிலைப்பாடுகளை வெளிக்காட்டுவதாகவும் சிறார்களின் ஆளுமை,திறமை உடல் மற்றும் மன ஆற்றல்களை வெளிக்காட்டுவதாகவும் அமையும் இந்நூல், சிறுவர் தொடர்பான அடக்கு முறைகளைக் கண்டிப்பதும் இதன் நோக்கமாகும்.

இனிவரும் காலங்களில் இச்சஞ்சிகை வடஇலங்கை பத்திரிகையாளர் சங்கத்துடன் இணைந்து வெளியிடப்படவுள்ளதாக நிர்வாகிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. (க-04)

## இலங்கையில் முதலீடு செய்ய டுபாய் வர்த்தகர்களுக்கு அழைப்பு

அமைச்சர் டிரோன் நேரில் விடுத்தார்

(கொழும்பு)

இலங்கையில் அதிக முதலீடுகளை மேற்கொள்ளுமாறு டுபாயில் உள்ள வர்த்தகக் கழகத்தினருக்கு இலங்கை வெளியுறவு அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ அழைப்பு விடுத்துள்ளார்.

தற்போது மத்தியகிழக்கு நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமைச்சர் டுபாயில் உள்ள வர்த்தகக் கழகத்தினரைச் சந்தித்து உரையாடிய போதே இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், இலங்கையின் சுற்றுலாத்துறையில் அதிக முதலீடுகளை மேற்கொள்ளலாம் என்றும்,

இலங்கையில் தற்போது நடைபெற்றுவருகின்ற சமாதானப் பேச்சுவார்த்தை வெற்றிப் பாதையை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதால் பல நாடுகளும் நம்பிக்கையுடன் தமது முதலீடுகளை மேற்கொள்ள முன்வந்திருக்கின்றன. அந்த வகையில் தாங்களும் எந்த வித அச்சமும் இன்றி பெருமளவு முதலீடுகளை மேற்கொள்ளலாம் என்றார்.

இதேவேளை,டுபாயில் உள்ள பத்திரிகை ஒன்றிற்கு அமைச்சர் பெர்னாண்டோ அளித்த பேட்டியில்,




தற்போது இலங்கையில் நடைபெற்றுவரும் சமாதான முயற்சிகளைப் பாராட்டி கருத்து வெளியிட்டதுடன், இதனால் இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்துள்ளதையும் சுட்டிக்காட்டினார்.

அதேசமயம், அரபு நாடுகளின் பல தலைவர்களை சந்தித்துவரும் அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ அபுதாபியில் உள்ள அரசியல் பிரமுகர்களை சந்தித்து விரைவில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார் என்றும் அறியப்படுகின்றது.(க-10)

## வாழ்க்கைச் செலவை குறைக்க திட்டம் தயாரிக்கும் குழு அமைப்பு

(கொழும்பு)

பிரதமரின் பணிப்பின் பேரில் வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு அது தொடர்பான ஆலோசனைகளையும் திட்டங்களையும் வழங்கவென குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் தலைவராக கேஎச் ஜே. விஜயதாச நியமிக்கப்பட்டுள்ளார்.

இக்குழுவினர் இது தொடர்பாக அமைச்சர் மட்டக்குழுவிடம் தமது ஆலோசனைகளையும் திட்டங்களையும் பரிந்துரைகளையும் வழங்கவுள்ளது.

வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்து வருவதை கட்டுப்படுத்தும் நோக்கில் அரசு இவ்வாறான திட்டங்களை மேற்கொண்டு வரும் இவ்வேளையில் எதிர்க்கட்சியின் வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-08)

## அரசர் முன் நடனமாடவென் தாய்லாந்துக்கு மாணவிகளை அழைத்துச் சென்ற ஆசிரியை

(கண்டி)

தாய்லாந்து அரசர் முன்னிலையில் நாட்டிய நிகழ்ச்சியொன்றை நடத்தவென கண்டியைச் சேர்ந்த பெண்கள் பாடசாலை மாணவிகள் சிலரை தாய்லாந்துக்கு அழைத்துச் சென்று திரும்பிய பாடசாலை நடன ஆசிரியர் மற்றும்இரு ஆசிரியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பது பற்றி கண்டி மாகாண கல்வி அமைச்சு ஆலோசித்து வருவதுடன், பாடசாலை அதிபர் மீதும் நடவடிக்கை எடுக்கப் படவிருக்கின்றது.

தாய்லாந்து அரசரின் முன்னிலையில் இச்சிறுமிகள் நடனமாட விருப்பதாகக் கூறி அவர்களை அழைத்துச் சென்ற போதிலும் அப்படியான நிகழ்வு ஒன்று இடம்பெறவில்லையென மாணவிகள் கூறியுள்ளனர். தாய்லாந்துக்கு இவர்களை அழைத்துச் செல்வதற்கென பெற்றாரிடமிருந்து பெருந்தொகைப் பணமும் அறவிடப்பட்டதாகத் தெரிகிறது.

மத்திய மாகாண கல்வி அமைச்சின் அனுமதியின்றியே இது நடைபெற்றிருப்பதாகவும் இது தொடர்பாக கடும் நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகவும் மாகாணக் கல்வி, கைத்தொழில் அமைச்சர் திரு. வேலுசாமி ராதாகிருஸ்ணன் கூறினார்.

மேற்படி பாடசாலையின் அதிபர் வேறு இடத்துக்கு மாற்றப்படவிருப்பதாகவும், சிறுமிகளை அழைத்துச்சென்ற நடனஆசிரியை பதவி நீக்கப்படுவாரென்றும் இதில் சம்பந்தப்பட்டுள்ள ஏனைய இரு ஆசிரியர்களும் கண்டியில் கடினப்பகுதிகளுக்கு இடம் மாற்றம் செய்யப்படுவார்களென்றும் அமைச்சர் கூறினார்.

பெற்றாரிடமிருந்து கிடைத்த புகார்களையடுத்து நியமிக்கப்பட்ட குழுவினரின் அறிக்கையின் படியே இந்த நடவடிக்கைகள் எடுக்கப் படவிருப்பதாக ராதாகிருஸ்ணன் கூறினார்.

மாணவர்களை அழைத்துச் செல்ல அனுமதி பெறாதது மட்டுமன்றி தாய்லாந்து சென்ற ஆசிரியர்களும் உரிய முறையில் விடுமுறை எடுத்திருக்கவில்லையென்பது தெரிவந்துள்ளது. (பி)

## சிறுவர் ஊடகத்துறை நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

சிறுவர் ஊடகத்துறை நிர்வாகிகளாக பின்வருவோர்தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் சி.கரன், உப தலைவர் கு.றஜித்தா, செயலாளர் தே.பிரகாசினி, உபசெயலாளர் தி.நவரட்ணம், பொருளாளர் உ.சங்கர்ஆனந் நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (பி)

## கோரிக்கை

(சுதுமலை)

வலிதென்மேற்கு பிரதேச செயலக பிரிவின் கீழ் உள்ள பிரான்பற்று சனசமூக நிலையம் தளபாடப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக தமது நிலையத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யுமாறு மேற்படி பிரதேச சபைக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளது. (க-252)

படம்: க.பவன்



நேற்று முன்தினம் நடைபெற்ற சிறுவர் ஊடகத்துறையின் 'துளிர்' நூல் வெளியீட்டு விழாவில், சிறுவர் ஊடகத்துறை உத்தியோகத்தர் தற்பரன் உரையாற்றுவதையும், ஏனைய சிறுவர் பாதுகாப்பு நிலை உத்தியோகத்தர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

## இன்னும் ஒரு தகவல்

# பெரியோர் துணை!

'வீட்டிலுள்ள பெரியவர்களின் பேச்சைக் கேள்! அவர்கள் சொல்கிறபடி நடந்துகொள்!' என்று ஒரு இளைஞனுக்குப் புத்திமதிசொன்னேன். 'அட போங்கள் சார்! அவர்கள் எல்லாரும் அந்தக்காலத்து ஆசாமிகள், இந்தக் காலத்தைப் பற்றி அவர்களுக்கு என்ன தெரியும். என்று எனது புததிமதி யைத்தூககியெறிந்து விட்டான் அவன். அதன் பின்னர் அவனைவிடாப்பிடியாக உட்காரவைத்து நான் கேள்விப்பட்ட ஒரு கதையை அவனிடம் சொன்னேன்.

ஒரு பாரசீகமன்னன். அவன் தன்னுடைய பரிவாரங்களோடு இளைஞர்களையும் அழைத்துக் கொண்டு, இஸ்தான்பூரிலே யிருந்து கப்பர் நாகூம் பட்டினத்துக்குப் புறப்பட்டானாம். மொத்தம் ஏழுநாள்பாலைவனத்திலே பிரயாணம் பண்ணி அங்கே போய்ச்சேர வேண்டுமாம்.

சர... அப்படி அந்த ஊரிலே என்ன விசேஷம்? அந்தப் பாரசீக மன்னனுடைய தாத்தாவைப் புதைத்த இடம் அந்த ஊரில் இருக்கிறதாம். தாத்தா இறந்த நூறாவது நாள் நினைவுச் சடங்கு அந்த ஊருக்குப் போய் நடத்த வேண்டி யிருக்கிறது. பாலைவனப் பகுதி என்பதனால்... இளைஞர்கள் மட்டும் தான் அந்தப் பயணத்தில் பங்கெடுத்துக்கொளள வேண்டும். வயதானவர்கள் வரக்கூடாதென்பது மன்னனுடைய கண்டிப்பான உத்தரவு. அதனால் மன்னன்தன்னுடைய பரிவாரங்களையும் இளைஞர்களையும அழைத்துக் கொண்டு புறப்பட்டான். ஒரு நாள் பிரயாணம் முடிவதற்குள் பாலைவனப் புயல் பயங்கரமாக வீசஆரம்பித்து விட்டது. புயல் எனறால் மிகவும் கடுமையான புயல்.

ஒட்டகங்கள் எல்லாம் திசைமாறிப்போய்விட்டன. மன்னனும் கொஞ்சப்பேரும் வழமாறிப்போய் விட்டார்கள். யார், யார் எங்கே யிருககிறார்கள் என்றே தெரியவில்லை. தணணர்த்தாகம, சிலர் செத்துப்போய் விடடார்கள். மன்னனுக்கு என்ன செய்வ தென்றே புரியவில்லை. தண்ணீர் இல்லாமல் தாக்குப்பிடிக்க முடியவில்லை! வயதிலே குறைந்த ஒரு இளைஞன். 'மன்னா! தண்ணீர் இருக்கிற இடத்தை நான் சொல்கிறேன். இங்கே யிருந்து தென்கிழக்குத்திசையில் இரண்டு கல் தொலைவு போனால் தண்ணீர் கிடைக்கும்!' என்றான்.

அவன பேச்சை நம்பி... அவன் சொன்ன திசையில் குறிப்பிடட தூரம் போய்ப்பார்த்தார்கள். பார்த்தால்... அவன் சொன்னது மாதிரயே அங்கே தண்ணீர் இருக்கிறது. மன்ன னுக்கு மிகவும் ஆசசரியம்! 'எப்படித் தெரியும் உனக்கு... அங்கே தண்ணீர் இருக்கிறதென்று' என்று அந்த இளையுனைப் பார்த்துக் கேட்டார். 'மன்னா! என்னை மன்னித்து விடுவதாக இருந்தால் நான் ஒரு உண்மையைச் சொல்கிறேன். நான் ஒரு தவறு பண்ணிவிட்டேன்' என்றான். 'நீ எந்தத் தவறும பண்ணியிருக்க மாட்டாய் எங்களுக்கெல்லாம் தண்ணீர் கொடுத்து உயிரைக் காப்பாற்றி இருக்கிறாய்! உன்னை ஒன்றும செய்ய மாடடேன். சொல்...!' என்றார் இராஜா!

பையன் மெதுவாக உண்மையைச் சொன்னான். 'அது வந்து மன்னா... என்னுடைய தந்தை உங்களுடைய தாத்தாவின நூறாவது நினைவு நாளைப்பார்க்க வருவேன் என்று பிடிவாதம் பண்ணினார். நான் மறுத்தேன். வயதானவர்கள்வரக்கூடாது என்பது இராஜாவினுடைய உத்தரவு.. என்று சொன்னேன். அவர் கேட்கவில்லை! மிகவும் அடமபண்ணினார். நான் அவரை ஒரு சாக்குப்பையில் போட்டுக் கட்டி ஒட்டகத்தின் மேல் சாப்பாட்டு மூட்டைகளோடு சேர்த்து வைத்துவிட்டேன். தன்னீர்க் கஷ்டம வந்தபோது அவரிடம் சொன்னேன். அவர்தான் சாக்குப் பையில் ஓர் ஓட்டை போடு என்றார். போட்டேன் அதன் வழியாகப் பார்த்துவிட்டுத்தான் தண்ணீர் இருக்கிற இடத்தைச சொன்னார். அதை எப்படிக் கண்டு பிடித்தீர்கள் என்று கேட் டேன். மாலைநேரத்தில் சிச்சிலிப் பறவைகள் தண்ணீர் குடித்துவிடடுத்தான் தூங்கும். நான் சாக்குத்துவாரம் வழியாகப் பார்த்தபொழுது தென்கிழக்குத்திசையிலிருந்து அந்தப் பறவைகள் வந்தது தெரிந்தது அதனால்தான் அஙகே தணணீர் இருக்கும என்று சொன்னேன் என்றார்' என்று சொன்னான் அந்த இளைஞன். மன்னன் உடனே அந்தப் பெரியவரைச் சாக்குப் பையிலிருந்து வெளியே கொண்டு வந்தான்.

'பெரியவர்கள் எப்போதுமே அனுபவசாலிகள் அவர்கள் துணயில்லாமல் பிரயாணம் பண்ணியது தப்பு என்பதைப் புரிந்து கொண்டேன். நல்லவளை இந்தப் பெரியவர் இப்போது நம்முடன் இருக்கிறார் 'இனி இவர்தான் எனக்கு அமைச்சர்!' என்றான் மன்னன். நினைவுநாளைக் கொண்டாடிவிட்டு எல்லோரும நாட்டுக்குத் திரும்பினார்களாம். இந்தக் கதையைச் சொல்லிவிட்டு அனுபவப் பாடசாலைகளில் படித்த முதியவர்களுக்கு மரயாதை கொடுக்க வேண்டும். அவர்கள் பேச்சைக் கேட்க வேண்டும் என்று என் எதிரில் உட்கார்ந்திருக்கிற இளைஞனுக்கு புத்திமதி சொன்னேன்.

'சரிசார்... இவ்வளவு தூரம் சொல்கிறீர்கள். ஏற்கனவே ஒருபெரியவர் சொன்ன புத்திமதியைக் கேட்டுத்தான் நான் அவஸ்த்தைப்பட்டுக்கொண்டிருக்கின்றேன்' என்றான் அவன் என்ன புத்திமதி சொன்னார் அவர் என்றேன். 'உங்களிடம வந்து புத்திமதி கேட்கச் சொன்னார் சார். அதன் பலன் இந்த ஐந்து நிமிஷ அவஸ்தை என்கிறான் அவன்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# 20 வருட பிரச்சினைகளுக்கு சில தினங்களில் தீர்வுகாண முடியாது

### மாத்தறையில் ஐப்பானிய பிரமுகர்

(அக்குரஸ்ஸ)




இருபதுவருடங்களாக இருந்துவரும் ஒரு பிரச்சினைக்கு இரண்டு மூன்று நாட்களில் தீர்வு ஏற்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கமுடியாது. ஆனால் இப்பொழுது இலங்கை அரசுக்கும் தமிழீழவிடுதலைப் புலிகளுக் குமிடையில் நடைபெற்றுவரும பேச்சு வார்த்தைகள் வெற்றியளிக்கும் என்றே ஜப்பான் நம்புகின்றது.

இவ்வாறு இலங்கை வந்துள்ள ஜப்பானிய விஷேடதூதுவர் யசுஷி அகாஷி கூறினார். ஜப்பானிய விஷேட தூதுவருக்கு முதலமைச்சர் தமது அலுவலகத்தில் அளித்த உபசாரத் தின் போது அவர் இக்கருத்தைக் கூறினார்.

போரினால் சிதைந்து போயுள்ள ஒரு நாட்டை மீண்டும் கட்டியெழுப் புவது இலேசானகாரியமன்று. ஆனால பொறுமையாலும், கடின உழைப் பினாலும் இதனைச்சாதிக்க முடியும். உலக மகா யுத்தம் ஒன்றை எதிர் கொண்டு சமாளித்ததின் மூலம் ஜப்பானுக்கு நல்ல அனுபவமுண்டு வீழ்ந்துபோன எமது பொருளா தாரத்தை மீளக்கட்டியெழுப் புவதற்கு 40ஆண்டுகள் பிடித்தது என்றார் அகாஷி.

இப்பொழுது நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளின் ஒரு அமர்வு ஜப்பானில் மார்ச்மாதம் நடைபெற விருக்கின்றது. அதையடுத்து யுத் தத்தினால் அழிந்து போயுள்ள பிரதேசங்களைக் கட்டியெழுப்பு வதற்கான சர்வதேச மாநாடொன்று நடைபெறும். இதில் அக்கறை கொண்ட பல நாடுகள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவிருக் கின்றன. இலங்கை ஜப்பானின் நல்லதோர் நாட்புநாடாக இருந்து வந்துள்ளது. இங்கே பல்லாண்டு களாக ஜனநாயகம் தழைத்து வந்துள்ளது என்றார் ஜப்பானிய விசேடதூதுவர்.

அவர் மேலும் பேசுகையில், இந்த நட்பின் அடையாளமாக வடக்கு - கிழக்கின் அபிவிருத்தி குறித்து மட்டுமல்ல, தெற்கின் வளர்ச்சியி லும் அக்கறை கொள்ளப்படும் இந்த முயற்சியில் உலக வங்கி போன்ற நிறு வனங்களும் இலங்கைக்கு உதவ விருக்கின்றன. எதுவானாலும் ஜனாதிபதி, பிரதமமந்திரி உட்பட எல்லாத் தரப்புகளுக்கிடையிலும் ஒற்றுமை நிலவ வேண்டியது அவசியமாகும். இதன் மூலமே அமைதி முயற் சியை வெற்றிகரமாக்க முடியும் என்றார். (பி)

### திருகோணமலையில்

# நிலக்கண்ணி வெடிகளை அகற்றும்பணி துரிதம்

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த யுத்தம் காரணமாக புதைக் கப்பட்ட நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் பணி துரிதகதியில் நடை பெற்று வருகிறது என ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட கண்ணி வெடிகள் அகற்றும் பிரிவினர் தெரிவித் துள்ளனர்.

திருகோணமலை மாவட்டச் செயல கத்தில் அரச அதிபர் தலைமையில கண்ணிவெடிகளை அகற்றுவது தொடர் பான ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித் துள்ளார்.

சமாதான நடவடிக்கைகளைத் தொடர்ந்து, மாவட்டத்தின் திரியாய் கண்ணியா,பீதியடி, மாங்காய் ஊற்று, நாவல்வத்தை போன்ற இடங் களில் மக்களை மீளக் குடிய மர்த்துவதற்காகவே இப்பணிகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த கால யுத்தம் காரணமாக மாவட்டத்தில் அதிக பாதிப்புக்கு உள் ளாகிய கிராமங்கள் இவை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இக் கூட்டத்தில் அரசசார்பற்ற நிறுவனங்ளின் பிரதிநிதிகள், பொலிஸ், இராணுவம் மற்றும் கடற்படை அதிகாரி களும் கலந்து கொண்டனர். (க-9)

## இராசி பலன்

**27. 01. 2003**

**(தை 13, திங்கள்)**

| | |
|---|---|
| தசமி | மு.இ 10.32வரை |
| அனுசம் | பி.இ 4.04வரை |
| இராகுகாலம் | 8.06 - 9.36 |
| சுபநேரம் | 12.36- 2.06 |

**மேடம்**
எதிர்பாராத மனஸ்தாபம், உடல்நலக் குறைவு, பிரயாணபயம், காரியதடங்கல்.

**இடபம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, அபூர்வ சந்திப்பு, காரிய அனுகூலம், உடல்நலம்

**மிதுனம்**
நினைத்த காரியம் கைகூடும், தேகசுகம், சுவாரஸ்யம், தொழில் விருத்தி

**கடகம்**
வியாபார நன்மை, மனச்சோர்வு, காரிய இடையூறு, புத்திரரால் கவலை.

**சிங்கம்**
தன்னம்பிக்கைக் குறைவு, பெரியோர் ஆதரவு, கல்வியில் ஆர்வம், முயற்சி தாமதம்.

**கன்னி**
தடைப்பட்ட காரியம் நிறைவேறும், தனலாபம், உறவினர் சந்திப்பு, கூட்டு முயற்சி.

**துலாம்**
கௌரவக்குறைவு, எடுத்த கருமம் தாமதமாகும், வாக்குக்கலகம், பொருள் விரயம்.

**விருச்சிகம்**
கடுமையான யோசனை, தொழில்பலிதம், நல்ல முயற்சி, காரிய தாமதம்.

**தனுசு**
அமைதிக்குறைவு, பிதா சிந்தை, காரியஅலைச்சல், பிரயாணம்.

**மகரம்**
நணபர்கள் சந்திப்பு, எதிர்பாராத நன்மை, குடும்ப சுகம், கீர்த்தி

**கும்பம்**
சுபநிகழ்ச்சி, தூரதேசச்செய்தி, கீழ்ப் படிவு, முயற்சி கைகூடும்.

**மீனம்**
ஆன்றோர் மதிப்பு, உடல்உழைப்பு, அச்சமான நிலை, முயற்சி தாமதம்.
(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**- வளவன்**

# பட்டதாரி ஆசிரியர்கள் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்

### கல்வி அமைச்சர் கொடித்துவக்கு தெரிவிப்பு

(கொழும்பு)

கல்வித்துறையில் ஆசிரியர்களா கக் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்பவர்களுக்குப் பதிலாக நியமிக் கப்படும் பட்டதாரிகளின் எண்ணிக் கையை அதிகரிக்கப்போவதாக கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தீர்மானித்துள்ளார்.

வடக்கு - கிழக்குப்பகுதிகளில் ஓய்வுபெறும் ஆசிரியர்களுக்குப் பதிலாக தற்போது 450ஆசிரி யர்களே நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதனை ஆயிரத்து 250ஆக உயர்த்தத் தீர்மானம் எடுக்கப்பட் டுள்ளது.

இவ் ஆசிரியர்களை நியமிப்ப தற்குத் தேவைப்படும் நிதி குறித்து, திறைசேரியின் அனுமதி பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொளளப்பட்டு வருகின்றன.

நாடளாவிய ரீதியில் வேலை வாய்ப்பின்றி 17அயிரம் பட்டதாரி கள் இருக்கின்றனர்.

இவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படும் போது மாவட்டங் களில் உள்ள வெற்றிடங்களைக் கருததில கொண்டு அம்மாவட்டங்களில் உள்ள பட்டதாரிகளுக்கு முன் னுரிமை வழங்கப்படவுள்ளது. (க-8)

# 100 மில்லியன் கடனுதவி

## இந்தியா வழங்க உறுதி

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு இந்தியா 100மில் லியன் ரூபாக்களை கடனாக வழங்கும் என இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் நீரூபம் சென் தெரிவித் துள்ளார்.

இந்தியக் குடியரசு தினத்தை யொட்டி இந்திய இல்லத்தில நேற்று நடைபெற்ற வைபவத்தில் உரை யாற்றும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய முயற்சிகளுக்கு இந்தியாவின் பூரண ஒத்துழைப்பு உண்டு என்றும் இலங்கையின் ஒருமைப் பாட்டையும், இறைமையையும் உறுதி செய்யும் வகையில் இந்தியா தனது பூரண ஒத்துழைப்பை வழங்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அபிவிருத்தி குறித்த செயற்பாட்டினை ரயில் போக்கு வரத்து, மின்சாரம், போன்றவையின் அபிவிருத்தி குறித்து பூரண ஒத்து ழைப்பு வழங்கப்படும் என்றும் தெரி வித்தார். (க)

ஆற்றாரும்ஆற்றி அடுப இடனறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின்
- குறள் -

வலம்புரி

## உண்மை அதுதான்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு, முன்னதாக ஆயுதங்களைக் கைவிடுமாறு விடுதலைப் புலிகளிடம் கேட்க முடியாது. அது யதார்த்தத்திற்கும பொருத்தமான தல்ல. இவ்வாறு நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதேகருத்தைக் கடந்த மாதம் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸும் தெரிவித்திருந்தாராயினும் அக்கருத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினால் உச்சரிக்கப்படுகின்றபோது அதற்கிருக்கக்கூடிய கனதி வித்தியாசமானது.

கடந்த காலங்களில் இனப்பிரச்சினையைத் தீர்க்க முற்பட்ட போதெல்லாம் அம் முயற்சிகள் படுதோல்வி கண்டதற்குக் காரணம் யதார்த்தத்திற்குப் பொருந்தாத நிபந்தனைகளை அரசு முன்வைத்து வந்ததேயாகும். குறிப்பாக சமாதானப் பேச்சுக்கு முன்னதாக விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கைவிட வேண்டுமென்ற நிபந்தனைகளை முன்னைய அரசுகள் முன்வைத்தன.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு சிங்கள அரசுகள் முன்வருகின்றனவென்றால் அதற்குக் காரணமே விடுதலைப் புலிகளிடமுள்ள ஆயுதங்கள்தான். நிலைமை இவ்வாறாக இருக்கும் போது ஆயுதங்களைக் கைவிடுமாறு விடுதலைப் புலிகளுக்கு நிபந்தனை போடுவது யதார்த்தத்திற்கு பொருந்தாத விடயமாகும்.

இந்த உண்மையை நாட்டின் பிரதமர் ஒருவர் உணர்ந்து அதனை வெளிபடுத்தியிருப்பது இதுவே முதற் தடவையாகும் .நாட்டின் முக்கிய தலைவா ஒருவர் யதார்த்தத்திற்குப் பொருத்தமான கருத்தை முன்வைத்திருக்கும் அளவிற்கு சிங்களத் தலைவர்களிடையே மனமாற்றம் ஏற்பட்டுள்ளமை, முக்கிய விடயமாக இருப்பினும், நிலைமையை யுணராத இனவாதிகள் இன்னமும்இருக்கவே செய்கிறார்கள் என்ற உண்மையையும்மறந்து விடுவதற்கில்லை.

இனப்பிரச்சினைகக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கு முன்னதாகப் புலிகளிடம்,ஆயுதங்களைக்கைவிடுமாறோ அவர்களது நீதி மன்றங்கள் மறறும் காவல்துறை நிலையஙகளை பூட்டி விடுமாறோ கேட்க முடியா தென்ற பிரதமரின் கருத்துக்கு மேலாக இன்னொருபடி மேலே சென்று சிந்திப்பதாயின் இனப் பிரச்சினைத தீர்வுக்குப் பின்னரும் விடுதலைப புலிகள் ஆயுதங்களை வைத்திருப்பது குறித்தும் அவர்களின் முகதாவில் நீதி நிர்வாகங்களை மேற்கொள்வது குறித்தும் ஆராயப்படு மாயின்அ்.து இனப் பிரசசினைக்கு விரைவாகத் தீர்வு காண்பதற்கு உதவுவதாக இருக்கும்.

# முக்கிய பிரச்சினைகள் தீரும் வரையில் பிரதமர் ரணிலுடன் சந்திப்பு இல்லை

## அமைச்சர் மகேஸ்வரன் சூளுரை

(யாழ்ப்பாணம்)

'எனது பிரதிநிதித்துவம் மூலம் ஆட்சி நடாத்திக்கொண்டிருக்கும்



ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் கடந்த 14 மாதங்களாக தமிழ் மக்களுக்குரிய எந்த ஒரு பிரச்சினையையும் முற்றாகத் தீர்த்து வைக்காத அதேவேளை தமிழ் இனத்தை அழிவுக்கு கொண்டு செல்லும் ஆயுதந்தாங்கிய சில தமிழ் குழுக்களின் செயற்பாடுகளுக்கு ஆதரவும் கொடுத்து வருகின்றது. தமிழ்மக்களது ஒரேஒரு பிரதிநிதியாக ஆளும் கட்சியில் இருக்கும் நான் இவற்றை தட்டிக் கேட்கவேண்டிய சுதந்திரம் எனக்குண்டு. இதனை தவறாக விமர்சிப்பதற்கோ அல்லது நான் எதிர்க்கட்சியில் இணைந்து விடப் போகிறேன் என வதந்திகளை உருவாக்கி விடுவதிலும் எந்த வித உண்மையும் இல்லை என இந்து காலாசார பண்பாட்டலுவல்கள் அமைச்சர் தி. மகேஸ்வரன் நேற்று தமது இல்லத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

மேற்படி மாநாட்டில் அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது. நான் ஜனாதிபதி நடாத்திய பொங்கல் விழாவில் கலந்து கொண்டதையும் பி.பி.சிக்கு பேட்டி கொடுத்ததையும் தவறான வழியில் சில ஊடகங்கள் விமர்சித்துள்ளன.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எதிர்க்கட்சியின் உதவியும் அவசியமானது தமிழர்களின் பிரச்சினைகள் குறித்து தெளிவற்ற நிலையில் உள்ள எதிர்க்கட்சி, மற்றும் ஜனாதிபதிக்கு அவற்றை விளக்கி இந்த சமாதான நடவடிக்கைக்கு ஆதரவு தேடுவதே எனது முயற்சி அத்துடன் கடந்த 14 மாதங்களாக எமது அரசில் உள்ள 52 அமைச்சுக்களுக்கும் ஏராளமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இவற்றில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒரு சில அமைச்சுக்களை தவிர எந்த அமைச்சும் இங்கு எந்தவிதமான அபிவிருத்திப் பணிகளிலும் ஈடுபடவில்லை. முழுநிதியினையும் தென்பகுதியிலேயே செலவிட்டு வருகின்றனர்.

பேச்சுவார்த்தையை குழப்புவதையும், உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றல், கைதிகள் பிரச்சினை என்பவற்றில் சுமூகமான தீர்வெடுக்க ஜனாதிபதி தடையா இருப்பதாக அரசு விளக்கம் கொடுக்கிறது. உண்மையில் மேற்படி விடயங்களில் அரசு கொண்டிராத ஈடுபாட்டை சமாளிப்பதற்காகவே ஜனாதிபதி எதிர்ப்பதாக கூறுகிறார்கள். இவற்றில் எவ்வளவு உண்மை உள்ளதென ஆராயப்பட்ட வேண்டும்.

நான் மிக முக்கிய விடயங்கள் தொடர்பாக பிரதமருக்கு அறிவித்துள்ளேன் உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றுதல மற்றும் ஆயுதக்குழுக்களுக்கு உதவி வழங்குதல் மேற்படி இரண்டு பிரச்சினைகளுக்கும் சுமூகமான தீர்வு கிடைக்காத பட்சத்தில் எந்த ஒரு சந்திப்பையும் பிரதமருடன் வைப்பதற்கு நான் விரும்பவில்லை.

இனப்பிரச்சினைகளை சுட்டிக் காட்டுவதற்கும் தட்டிக் கேட்பதற்கும் எனக்கு பூரண சுதந்திரம் உண்டு என்பதுடன் அரசு கொடுக்கும் உல்லாச பிரயாணம் உள்ளிட்ட பல சலுகைகளை அனுபவிப்பதற்காக இவற்றை தட்டி கேட்காமல் காலம் கடத்தும் ஏனைய அமைப்புக்கள் விடும் விமர்சனம் குறித்து எனக்கு எவ்வித அக்கறையும் இல்லை என அமைச்சர் தெரிவித்தார்.

(க-43-27-246)

## அடிப்படை தேவைகள் கோவை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

மனித நேய அமைப்புக்களின் கூட்டமைப்பும் உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பான புருக்கிங்ஸ் வேலைத் திட்டமும் இணைந்து ''08 அடிப்படைத்தேவைகள்'' எனும்கோவை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

இதில்இடம் பெயர்ந்த மக்ளுக்கான நியமனங்கள், தராதரங்கள், தேவைகள் என்பவற்றை உள்ளடக்கிய வகையிலான உணவும் போசாக்கும் கல்வித்தராதரங்கள் உடல் நலப்பராமரிப்பு வசிப்பிடம் சமூக உளவியல் தராதரங்கள் பாதுகாப்பான போக்குவரத்து பொதுச்சுகாதார வசதி நீர் வசதி என்பவற்றை தொகுத்து உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான நெறிமுறைக கோட்பாடுகளை வெளியிட்ட இவ்அமைப்புக்கள் இவற்றை அமுலாக்கும் நடவடிக்கையிலும்ஈடுபட்டு வருகின்றன.

(க-4)

## அரச சார்பற்ற நிறுவனங்கள் தம் இஷ்டம் போல் இயங்க அனுமதி இல்லை

### அரச அதிபர் கூறுகிறார்.

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் தம்மிஷ்டப்பிரகாரம் சுயாதீனமாக இயங்க இனிமேல் அனுமதிக்கப்பட மாட்டாது என யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் அரச செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளியன்று நடைபெற்ற இக்கூட்டத்தில் பிரதேச செயலர்கள் விவசாய கமநல சேவைகள் திணைக்களங்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கு கொண்டிருந்தனர்.

அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில்,

கடந்த காலங்களில் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் சில தம்மிஷ்டம் போலச் செயற்பட்டமை காரணமாக பல்வேறு விதமான பிரச்சினைகள் எழுந்துளளதுடன், பல குறைபாடுகளும் நிலவியுள்ளன. யாழ். மாவட்டதில் தற்போதைய பௌதீக நிலையில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. மாறிவரும் புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப நாம் எமது விவசாயிகளுக்கான புதிய திட்டங்களைத் தயாரிக்க வேண்டிய தேவை மேற்கிளம்பியுள்ளது.

இந்நிலையில் நிறுவனங்கள தாம் விரும்புவது போல எமது விவசாயிகளைத் தொடர்ந்தும் கையேந்தும் நிலையில் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது. எனவே யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகளின் வாழ்க்கைத்தரத்தையும், வருமானத்தையும் உயர்த்தும் வகையில் புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவிருக்கின்றன. அதுவரையும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது விவசாயத் திட்டங்களைத் தற்காலிகமாக இடைநிறுத்திக் கொள்ள வேண்டும் எனக்கேட்டுக் கொண்டார்.

(க-77)

## தினசரி தியானம்

### ஆத்மீகச் செல்வம்

ஒன்று என்னும் எண்ணிக்கைமட்டும் முன்னால் இல்லாவிட்டால், எத்தனை பூச்சியங்கள் இருந்துதான் என்ன பயன்? அதுபோல, ஆத்மீகச் செல்வத்தை அடைய முயற்சி எடுத்துக் கொள்ளாவிட்டால் அதாவது ஆண்டவனை அடையப்பாடு படாவிட்டால், மூவுலகின் செல்வங்களும் துன்பமே

எனவே, ஆண்டவனையே சிந்தனை செய். எப்பொழுதும் அவன் ஞாபகமாகவே இரு. அவன்தான் யாதார்த்தமான அழியாத மூலப்பொருள். அவன் இல்லாவிட்டால் வாழ்க்கையே சாரமற்றதாகும்.

சுவாமி சிவானந்தர்

## இவ்வாண்டு முதல் புதிய வடிவத்தில் சாரதி அனுமதிப்பத்திரம்

(கொழும்பு)

இவ்வாண்டு முதல் மோட்டார் போக்குவரத்து திணைகளத்தினால் வழங்கப்படும் ச்ாரதி ,அனுமதிப்பத்திரம் புதிதாகவடிவமைக்கப்படவுள்ளது.

இதன்படி ஒவ்வொரு தடவையும் போக்குவரத்து விதிகளை மீறும்போது பொலிஸாரினால் சாரதி அனுமதப் பத்திரத்தில் துளையிடப்படும் .

அதற்கென ஒவவொரு பொலிஸ் நிலையங்களிலும் துளையிடும் இயந்திரங்கள் வைக்கப்படவுள்ளன.

வாகன சாரதிகள் போக்குவரத்து விதிகளை பத்துத் தடவைக்கு மேல் மீறும் பட்சத்தில் அனுமதிப்பத்திரம் ரத்துச்செய்யப்படும் என்றும் தெரிவிக்கப் படுகின்றது.(க-10)

## போலி நாணயத் தாள் அச்சிடும் நிலையம் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

அனுராதபுரத்தில் போலி நாணயத்தாள்களை அச்சிட்டு வந்த நிலையம் ஒன்றினை விசேட பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர்.

இந்நிலையத்தில் அச்சிடப்பட்டிருந்த ஆயிரம் ரூபா,500 ரூபா தாள்களையும் குற்றத்தடுப்புப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

இந்தப் போலி நாணயத் தாள்களை அச்சிடுவதற்கு காரணமாக இருந்த புகைப்படக கலைஞர் ஒருவரும், 3 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந் நிலையத்துக்கு பொலிஸாரால் சீல் வைக்கப்பட்டதுடன்,அதனைச் சுற்றி பொலிஸ் பாதுகாப்பும் போடப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக நாட்டில் போலி நாணயத்தாள் களின் புழக்கம் பாவனையில் அதிகமாக இருப்பதனால் மக்களை விழிப்புடன் இருக்கும் படி மத்திய வங்கி எச்சரித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(க-08)

## க.பொ.த.உயர் தர
# கற்கை நெறி தெரிவுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

2002 டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற க.பொ.த (சாதர்ரண தர)ப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் நன்மைகருதி உயர் கல்வி கற்கைநெறித் தெரிவுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு ஒன்றினை யாழ்.மாவடடக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

இக்கருத்தரங்கு நாளை செவ்வாய்க் கிழமை காலை 10.00மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம் பெறும். இக் கருத்தரங்கில் யாழ்.பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி கே.சற்குணராஜா, உயர் தொழில் நுட்ப நிறுவகப் பணிப்பாளர் ரி.இராசரத்தினம், தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன், யாழ்.தொழில் நுட்பக்கல்லூரி அதிபர் எஸ்.செந்தில்நாதன், இளைப்பாறிய அதிபர்.அ.பஞ்சலிங்கம் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர்.

இக் கருத்தரங்கிற்கு கொக்குவில இந்துக் கல்லூரி, கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம், கோண்டாவில் ஸ்ரீ ராமகிருஷ்ண வித்தியாலயம், கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம், கொக்குவில் நாமகள் வித்தியாலயம், பெரியபுலம் மகாவித்தியாலயம், கொக்குவில் ஞானபண்டித வத்தியாலயம், ஆனைக் கோட்டை உயரப்புலம் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் விஷேடமாக அழைக்கப்பட்டுள்ளனர். கலந்து கொள்ளும் மாணவர்கள் பாடசாலைச் சீருடையில் வருகைதரல் வேண்டும் எனவும் ஆர்வமுள்ள பெற்றோரும் கலந்து கொள்ளலாம் எனவும் பேரவைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தெரிவித்துள்ளார். யாழ்.மாவட்டத்தின் ஏனைய பகுதிகளுக்கும் இவ்வாறான கருத்தரங்குகள் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

# அரசு- புலிகள் சமாதான முயற்சிக்கு இந்தியா தனது உதவியை வழங்கும்

## சுதந்திர தினத்தில் தூதுவர் நிருபம் சென் உரை

(கொழும்பு)

இலங்கையின் ஒருமைப்பாடு, இறைமை என்பவற்றை உறுதி செய்யும் வகையில் அரசுக்கும் விடுதலைப் புலிகளிற்கு மிடையே ஏற்படுத்தப்பட்டுள்ள சமாதான முயற்சிகளுக்கு இந்தியா உதவி வழங்குமென இலங்கைக்கான இந்திய தூதுவர் நிரூபம் சென் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் குடியரசு தினத்தை முன்னிட்டு கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தில் நேற்றுநடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் அரசுக்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையிலான சமாதான முயற்சிகளின் பயன்களை இலங்கை மக்கள் அனுபவிக்கத் தொடங்கியுள்ளனர். இந்நிலையில் இலங்கையில் வாழும் அனைத்துச் சமூகங்களினாலும் ஏற்றுக் கொள்ளத்தக்க தீர்வினை இந்தியா ஆதரிக்கும்.

இலங்கையின் அரசியல் பிரமுகர்களின் இந்திய விஜயங்களினால் இரண்டு நாடுகளிற்கு மிடையிலான உறவு வலுவடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கையின் பொருளாதார உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்யவும் மின்சத்தி எரிபொருள் விவசாயம் மற்றும் புகையிரத போக்குவரத்து போன்ற துறைகளுக்கு இந்தியா100 மில்லியன் ரூபாவை கடனாக வழங்குமென்றும் அவர் தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் இந்திய குடியரசுத்தலைவர் அத்துல் கலாமின் குடியரசுத்தின செய்தியும் வாசிக்கப்பட்டது (ந-5)

### சதீஸ் நம்பியாரின்....

ஏற்றுக் கொள்ளக் கூடிய சூழ்நிலை தற்போது இல்லை. சமாதான முயற்சி தொடங்கி 14 மாதங்களாகியும் இன்றுவரை யாழ் மக்கள் இயல்பு வாழ்வுக்குத திரும்பவில்லை

எங்களது முட்டுக்கட்டை நிலையை நீக்குவதற்கு நம்பியாருக்கு இங்கு காணிகள் இல்லை. யாழ்ப்பாணம் சம்பந்மாக ஏந்தவிதமான தொடர்புகளும் அற்றவர் அவர். இது தொடர்பாக நான் பிரதமருக்குக் கடிதம் ஒன்றையும் எழுதி உள்ளேன்.

சதீஸ் நம்பியாரின் அறிக்கைக்கோ, யாழ் குடாநாட்டு இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் அறிக்கைக்கோ நான் கட்டுப்படப் போவதில்லை. அதற்கு மாறாக பலத்த எதிர்ப்பினையே தெரிவிக்க உள்ளேன்.

நம்பியாரது வருகையை எந்த அரசியல் நோக்கத்துடனும் நான் எதிர்க்கவில்லை. விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்ற வகையில் அரசும் விடுதலைப் புலிகளும் பேசிவருகின்றது. இவ்வேளையில் பேச்சுவார்த்தையில் எந்தவொரு ஆலோசனைகளையும் தெரிவிக்க முற்படவில்லை. காரணம் அதன் போது சில முரண்பாடான கருத்துக்கள் எடுத்துக்காட்டப் பட்டால், அது சமாதான முயற்சிக்குப் பாதகமாக அமைந்து விடலாம் என்ற அச்சமாகும்.

மக்களினால் தெரிவு செய்யப் பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் என்றவகையில், இராணுவத்தை வெளியேற்ற வேண்டுமென்று மக்கள் கோரி வருகின்றனர்

சதீஸ் நம்பியாரின் அறிக்கை சரத் பொன்சேகாவிற்குச் சாதகமான அறிக்கையாகவே வரும் என்ற நம்பிக்கை எனக்குண்டு என்றும் அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்தார் (வ)

### இலங்கை....

முயற்சியின்பயனாக ஏற்பட்டு வரும் சமாதான சூழ்நிலையில் இந்தியாவும் மற்றும் ஐரோப்பிய நாடுகளும் இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுத்து வரும முயற்சிகளை அடுத்தே ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் இவ்வேண்டுகோளை அந்நாடுகளிடம் விடுத்துள்ளது. வடக்குக கிழக்கில் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டிய பல பகுதிகளில் இன்னமும் கண்ணி வெடிகள் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் மீள்குடியேற்றம் செய்யபபடவுள்ள பல பகுதிகளில் அடிப்படை வசதிகள மேற்கொள்ளப்படவில்லை என்றும் இது அங்கு குடியேறும் மக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுதலாக இருக்கும் என்றும் ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் சுட்டிக்காட்டியுள்ளதுடன் அகதிகளை திருப்பி அனுப்பும் முயற்சிகளை தாம் ஊக்கிவிக்கப் போவதில்லை எனவும் தெரிவித்துள்ளது. (ம)

### அமைச்சர்.....

அமைச்சர் மிலிந்தமொற கொடசிவில் அதிகாரிகள் எவரையும் சந்திக்காவிட்டாலும் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு,சமாதானக் குழு, யுனிசெவ், இலங்கை யுத்த நிறுதத்க் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளான ஈ.பி.ஆர்.எல்.எவ்(வரதர் அணி), புளொட் ஆகியவற்றினது உறுப்பினர் களையும் தனித் தனியாகச் சந்தித்து கலந்துரையாடினார்.

மடடக்களப்பு ஆயர் அதிவணக்கத்திற்குரிய கிங்ஸ்லி சுவாம்பிள்ளையை ஆயர் இல்லத்தில் சந்தித்து மட்டக்களப்பு நிலைமைகள் தொடர்பாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தினார். இப்பேச்சுவார்த்தையின் போது விடுதலைப்புலிகளுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்ள் தொடர்பாக ஆயரிடம் அமைச்சர் வினவிய போது விடுதலைப் புலிகளின் கட்டாய ஆட்சேர்ப்பை மறுத்துள்ளதாகஆயர் தெரிவித்துள்ளார். புலிகளின் கட்டாய நிதி சேகரிப்புக் குறித்து எந்தவிதமான முறைப்பாடும் தங்களிடம் வரவில்லைஎன ஆயர் அமைச்சரிடம் தெரிவித்துள்ளார். (ம)

### தேர்தல்...

இது பற்றித் தெரிவித்து பேச்சு நடத்தவிருக்கின்றோம்.இதற்கு முன்னர் நடைபெற்ற பேச்சுக்கள் சம்பிரதாய பூர்வமாக நடத்தப்பட்டிருக்கவில்லை ஐ.தே.மு அரசாங்கத்தை வெளியேற்றவும் அதனிடத்தே புதியதொரு அரசாங்கத்தை நிறுவவும்,தேர்தல் ஒன்று இல்லாமலே இதனைச் சாதிக்கவுமே நாம் ஆலோசனைகள் நடத்திவருகின்றோம் எனத் தெரிவித்தார்.

இதுபற்றி சமசமாஜக்கட்சியின் தலைவர் பட்டி, வீரக்கோன் தெரிவிக்கையில் இவ்விடயம் பற்றி முதலில் பொ.ஐ.முயின் நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் என்றார்.இதேவேளை அத்தகையதொரு கூட்டமைப்பை ஏற்படுத்துவதற்கான ஆயத்தங்களை முன்னணி சில உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் தீவிரமாச் செய்து வருகிறது.ஜே.வி.பி அநுரா பண்டாரநாயக்கவுடனும் லக்ஷ்மன் கதிர்காமருடனும் பேச்சுக்கள் நடத்தியுள்ளது.இனப்பிரச்சினைத் தொடர்பில் இரு கட்சிகளும் எடுக்கக் கூடிய பொது நிலைப்பாடு பற்றி இப் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன. ஜே.வி.பி ஜனாதிபதியிடம் பெப்ரவரி 1ம் திகதி தனது திட்டங்களைச் சமர்ப்பித்துப் பேசவிருக்கிறது.தயாரிக்கப்பட்ட திட்டம் இப்போது லண்டனில் உள்ள தலைவர்சோமவன்ச அமரசிங்கவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. (த)

### அரசு...

பேச்சுக்களின் போது இலங்கை சமஷ்டி ஆட்சி முறை ஒன்றினை ஏற்படுத்துவது தொடர்பாகவும் ஐரோப்பிய நாடுகளில் சமஷ்டி ஆட்சி முறை நிலவும் நாடுகளுக்கு நேரில் சென்று ஆராய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது. அதன் முதற் கட்டமாக பாராளுமன்ற உறுப்பினர் குழு ஒன்று கடந்த மாதம் ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்து சமஷ்டி குறித்து ஆராய்ந்தது.

சமஷ்டி ஆட்சி முறை தொடர்பாக ஜேர்மனியில் பாராளுமன்றக் குழுவினர் ஆய்வுகளை மேற்கொண்டு இருந்தாலும் அரசு-புலிகள் தரப்புப் பிரதிநிதிகள் இணைந்து சமஷ்டி முறை குறித்து மேலும் விரிவாக ஆய்வுகளை நடத்தவே இச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

அத்துடன் எதிர்வரும் மார்ச் மாதம் ஜப்பானில் நடை பெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு தொடர்பாகவும் அவர்கள் ஆராயவுள்ளனர். (க-8)

### மகேஸ்வரனுடன்...

நிலை தொடர்பாக மகேஸ்வரன் அவரிடம் எடுத்துக் கூறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்து கலாசார அமைச்சர் தெரிவித்த கருத்துக்கள் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் கவனத்திற்குக் கொண்டு வருவதாக மிலிந்த மொற கொட தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த வாரம் ஐ.தே.கட்சியின் தலைமைப் பீடத்திற்கு எதிராக அமைச்சர் மகேஸ்வரன் கருத்துத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

ULTRA HEALTH CARE

பதவி வெற்றிடம்

*சாரதிகள்

உடல் ஆரோக்கியமும் கனரக வாகனங்கள் ஓட்டுவதில் அனுபவமும் உடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
ULTRA HEALTH CARE
NO.740, NAVALAR ROAD
JAFFNA

## கண்காணிப்புக் குழு தலைவர் யாழ்.வருவார்

(கொழும்பு)

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் ரென்பியுறு ஹெவ்டே இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

யுத்த நிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துதல் மற்றும் யுத்த நிறுத்தமீறல்கள் தொடர்பான முறைப்பாடுகள் பற்றி யாழ்ப்பாண யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளார். நாளைய தினம் கிளிநொச்சிக்கு செல்லும் அவர் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்செல்வனைச்சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இதன்பின்னர் மட்டக்களப்புக்குச் செல்லும் அவர் அங்குள்ள நிலைமைகள் குறித்தும் விரிவாக ஆராயவுள்ளார். (த)

# க.பொ.த. உயர்தரத்தில் தொழில் நுட்ப பாடம்

கொழும்பு)

நாட்டின் தற்போதைய தேவைகளைப்பூர்த்திசெய்யக் கூடிய வகையில் தொழில் நுட்பமெனும் பாடத்திட்டம் க .பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு அறிமுகம் செய்யப்படவுள்ளதாக தேசிய கல்வி நிறுவகப்பணிப்பாளர் நாயகம் கலாநிதி வி.பி.குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கலாநிதி வி.பி.குணவர்த்தனா மேலும் தகவல் தருகையில் க.பொ.த. உயர்தரமாணவர்களுக்கு தற்போதுள்ள விஞ்ஞானம், கணிதம் கலைப்பாடத்திட்டங்களுக்கு மேலதிகமாக தொழில்நுட்பம் என்ற பாடம் அறிமுகம் செய்யப் படவுள்ளது. பட்டதாரிப் பாடத் திட்டத்தில் தொழில்நுட்ப பாடத்தை சேர்த்துக் கொள்வதற்கு றுகுணு, மொறட்டுவ பல்கலைக் கழகங்கள் சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் ஆண்டு 10 முதல் தகவல்தொழில்நுட்பம் ஒரு பாடமாக அறிமுகம் செய்யப் படும்என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வ)

பதவி வெற்றிடம்

பிரதேச செய்தியாளர்கள் (ஆண்கள்)

பின்வரும் பிரதேசங்களில் வெற்றிடங்களை நிரப்பவும், மேலதிகமாகவும் செய்தியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

| | |
|---|---|
| நீராவியடி | தெல்லிப்பழை |
| கொக்குவில்-கிழக்கு | அளவெட்டி |
| கொக்குவில்-மேற்கு | பண்டத்தரிப்பு |
| கோண்டாவில்-கிழக்கு | மாதகல் |
| கோண்டாவில்-மேற்கு | இளவாலை |
| உரும்பிராய் | சில்லாலை |
| ஊரெழு | நாவாந்துறை |
| அச்செழு | கொட்டடி |
| புன்னாலைக்கட்டுவன்-தெற்கு | குருநகர் |
| புன்னாலைக்கட்டுவன்-வடக்கு | பாசையூர் |
| தாவடி | கொழு ம்புத்துறை |
| இணுவில் | அரியாலை |
| மருதனார்மடம் | நல்லூர் |
| சுன்னாகம் | |

தகைமை ▸ க. பொ. த (சாதாரணம்) சித்தி

தகுதியும், ஆர்வமும் உடையவர்கள் முழுப்பெயர், நிரந்தர முகவரி, தற்காலிக முகவரி, பிறந்த திகதி, தே.அ.அ.இல, கி.சே.பிரிவு, பி.செ.பிரிவு, குடியியல் தகைமை, கல்வித் தகைமை, தொழில் புரிபவராயின் தொழிலின் தன்மை, தொழில் புரியும் திணைக்களம், இடம், மேலதிகத் தகைமை ஆகியன உள்ளிட்டதாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை

ஆளணி முகாமையாளர்
வலம்புரி
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு 10.02.2003 ற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிரதேச. செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பம்" எனத் தவறாது குறிப்பிடவும்

வலம்புரி — ஆளணி முகாமையாளர்

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.01.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.